Registered as a Newspaper

# தினச்செய்தி
வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

உள்ளே...


- நீடிக்கும் மர்மம் - நேர்கோட்டில் அமைந்திருக்கும் சிவாலயங்கள் - பக். 05
- பேலியோ டயட் - பக். 12
- பண்டார வன்னியன் - பக். 16


விலை : ரூபா 20.00

செய்தி - 42 ஜூலை 16-22, 2016 பக்கம் - 20

## யாழில் ரூபா 400 மில்லியனில் சர்வதேச விளையாட்டு அரங்கம்




(கொழும்பு)

ரூபா 400 மில்லியன் செலவில் யாழ்ப்பாணத்தில் ஒரு சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கம் எதிர்வரும் நவம்பர் மாதம் நிர்மாணிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இலங்கை கிரிக்கட் கட்டுப் பாட்டுச் சபை தலைவரும், உதவி சபாநாயகருமான திலங்க சுமதிபால தினச்செய்திக்கு வழங்கிய விசேட பேட்டியில் கூறினார்.யாழ் குடா நாட்டில் 50 ஏக்கர் நிலத்தில் இந்த சர்வதேச கிரிக்கட் விளையாட்டு அரங்கம் நிர்மாணிக்க திட்டமிடப் பட்டுள்ளதாக திலங்கா சுமதிபால கூறினார்.

02 இல்

## மேலும் இரண்டு சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு தொலைபேசி வசதி



(கொழும்பு)

மாளிகாவத்தை மற்றும் கொழும்பு றிமான்ட் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு தொலைபேசி வசதிகள் அமைத்து கொடுக்க சிறைச் சாலை திணைக்களம் முன் வந் துள்ளது.

சிறைச்சாலை ஆணையாளர் எச்.எம்.என்.சி .டனசிங்க தினச்செய்திக்கு கருத்து தெரிவிக் கையில், வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற் கனவே பரீட்சார்த்தமாக மூன்று தொலைபேசி வைக்கப்பட்டுள்ளன என்றார்.

02 இல்

தினச்செய்தி வாரமலர்

## உங்கள் தினச்செய்தியைக் கேட்டு வாங்குங்கள்

நாம் ஒவ்வொரு முறையும் தினச்செய்தியை புதுப்பொலிவுடன் வெளியிட்டு வருகின்றோம்.

சுவாரசியமான அரசியல் செய்திகள், சமூகச் செய்திகள் மற்றும் சினிமா புதினங்கள் ஆகிய வற்றைத் தருகின்றோம். இலங்கையில் வேறு எந்தப் பத்திரிகைகளிலும் வருவதில்லை. நாமே முன்னோடிகள், நாம் வெளியிட்ட பின் தான் ஏனைய ஊடகங்கள் செய்திகளை வெளியிடு கின்றன.

ஆனால் உங்கள் கைக்கு நேரகாலத்தில் தினச்செய்தி கிடைப்பதில்லை என்ற குற்றச் சாட்டு எழுந்துள்ளது. உங்கள் பத்திரிகை ஏஜென்டுக்கு நாம் உரிய நேரத்திற்கு எமது பத்திரிகையை அனுப்பி வைக்கின்றோம் சில ஏஜென்டுகள் ஏனோதானோவென்று பத்திரிகை களை போடுகின்றார்கள். சரியான காட்சிப்ப டுத்துவதில்லை. பலமுறை நாங்கள் உங்கள் பத்திரிகை ஏஜெண்டுகளுக்கு இது சம்பந்தமாக எடுத்துக் கூறியுள்ளோம்.

மேலான வாசகர்களாகிய நீங்களும் ஒத் துழைப்பு வழங்க வேண்டும்.

நீங்கள் ஏஜெண்டுகளிடம் சென்று உங்கள் தினச்செய்தி வாரமலர் பிரதியை கேட்டு வாங் குங்கள். உங்கள் வசதி கருதியே பிரதியொன் றின் விலையை ரூ. 20 ற்கு விற்பதற்கு முன்வந் துள்ளோம். எனவே எந்தவித சில்லரைப் பிரச் சினையில்லாமல் 20 ரூபாய் தாள் ஒன்றைக் கொடுத்து தினச்செய்தி வாரமலரை வாங்கி படித்து இன்புறுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

## வலிகாமம் நலன் புரிமுகாமில் வாழும் 971 குடும்பங்களுக்கு வீடுகள்



(கொழும்பு)

வலிகாமத்தில் நலன்புரி நிலையத்தில் அகதிக ளாக வாழும் மக்களுக்கு வீடு அமைப்பதற்கு பணம் ஒதுக்கீடு செய்யுமாறு சிறைச்சாலைகள் மறு சீர மைப்பு, புனர் வாழ்வு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து சமய விவகார அமைச்சின் செயலாளர் வே. சிவஞா-னசோதி தினச்செய்திக்கு கூறினார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் வலி காமத்தில் உள்ள 32 நலன் புரி நிலையங்களில் வாழும் 971 குடும்பங்கள் வசதியான வீடுகள் இன்றி கடந்த 25,30 வருடங்களாக கஷ்டப்படுகிறார்கள் என்றும், அவர்கள் வீடு கட்டுவதற்கு ஒதுக்கீடு செய் யுமாறு மந்திரி சபையிடம் கூறியதாக தெரிவித்தார்.

02 இல்

## தொலைக்காட்சி சேவைகள் டிஜிட்டல் மயமாகிறது



(கொழும்பு)

இலங்கையில் உள்ள தொலைக் காட்சிகளை டிஜிட்டல் மயமாக்க தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. சுனில் சிறிசேனா தினச்செய்திக்கு தகவல் தருகையில் தொலைக்காட்சி சேவைகளை டிஜிட் டல் மயமாக்குவதற்கு ஜப்பான் அர சாங்கம் உதவி செய்ய முன்வந் துள்ளது என்று கூறி னார்.

02 இல்

### கொண்டோடிச் சுப்பர்



தினச்செய்தி
வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk

# மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தில் என்னதான் நடக்கிறது? புரியாத புதிராக இருக்கிறது!

ஆரம்பத்தில் மிகவும் அதிகாரம் நிறைந்த சக்தி வாய்ந்த மனிதனாகக் கருதப்பட்ட முன்னாள் அமைச்சரும் மஹிந்த ராஜபக்ஷவின் தம்பியுமான பசில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் அடைக்கப்படார்.

ஆவரைத் தொடர்ந்து மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோஷிந்த ராஜபக்ஷவும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் அடைக்கப்பட்டார். இந்த கைதை அடுத்து மஹிந்த ராஜபக்கஷவின் மூத்த மகன் நாமல் ராஜபக்ஷவும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆளும் கட்சியை சேந்தவர்கள், மஹிந்த ராஜபக்ஷ மீது அரசியல் குரோதம் காட்டுகிறார்கள் என்று கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்துகிறது. இது ஒரு மேலோட்மான குற்றச் சாட்டு. உ ண்மை என்ன என்று தெரியவில்லை.

பசில் ராஜபக்ஷ கோடிக்கணக்கான பணத்தை அமைச்சராக இருந்த காலத்தில் சட்டவிரோதமாகச் சம்பாதித்தார் என்றும் காணி, பூமிகளை வாங்கினார் என்றும் குற்றம் சுமத்தப்பட்டது.

இரண்டாவது மகன் யோஷிந்த ராஜபக்ஷ பணச் சலவை செய்தார் என்ற குற்றத்தின் பெயரில் கைது செய்யப்பட்டார்.

இப்பொழுது நாட்டின் சிறிய நிலப்பரப்பை (4 1/2 ஏக்கர்) இந்திய கம்பனிக்கு விற்றார் என்றும் அதற்கு பணமாக ரூபா 70 மில்லியன் (7 கோடி) லஞ்சமாக பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

பண மோசடியில் ஈடுபட்டார்கள் கொள்ளை கொள்ளையாக பணம் சட்டவிரோதமாக சம்பாதித்தார்கள் என்று தான் ராஜபக்ஷவின் குடும்பத்தினர் கைதுசெய்யப்பட்டு வருகிறார்கள்.

இந்த நாட்டு மக்கள் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும், 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலும், இந்த நாட்டை ஆட்சி புரிவதற்கான அதிகாரத்தை மஹிந்த ராஜபக்விடம் கொடுத்திருந்தார்கள். இவ்வாறு அதிகாரம் பெற்ற மஹிந்த ராஜபக்ஷ தனது குடும்பம் நாட்டின் சொத்துகளை கொள்ளை அடிக்க துணை போய் இருக்கிறார் என்று கூறினால் மிகையாகாது.

ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, காலிமுகத் திடலுக்கு எதிராக இருந்த பழைய இராணுவ முகாம் இருந்த 4 1/2 ஏக்கர் நிலத்தை வெளிநாட்டுக் கம்பனி ஒன்றிற்கு விற்றார்கள். இவ்வாறு விற்றதை அடுத்து இந்தியாவை சேர்ந்த 'கிறிஸ்' என்ற கம்பனியிடம் இருந்து லஞ்சமாக ரூபா 7கோடியை நாமல் ராஜபக்ஷ பெற்றார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இந்தியாவை கிறிஸ் என்ற கம்பனி இந்த பணத்தை நிமால் பெரேகராவின் கணக்குக்கு அனுப்பி வைத்தது என்றும் பின்னர் விசாரணையின் போது அந்த பணம் நாமல் ராஜபக்ஷவுக்கு கையளிக்கப்பட்டது என்று தெரிய வந்தது.

இந்த நிமல் பெரேகரா தான் கால்ட்டன் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஆவார். கால்ட்டன் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் றக்பி விளையாட்டுப் போட்டிக்குதான் இந்த பணம் செலவிடப்பட்டதாக நாமல் கூறினார். ஆனால் இந்த கால்ட்டன் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் றக்பி விளையாட்டு போட்டியில் பங்குபற்றும் கழகங்களும் அனுசரணையாளர்களும் தான் செலவு செய்தார்கள் என்று தெரிவித்தார்கள்.

இந்த இந்திய கம்பனியிடம் இருந்து பெற்ற 7 கோடி ரூபாவில் ஒரு சதம் கூட இந்த றக்பி விளையாட்டுப் போட்டிக்கு நாமல் செலவிடவில்லை என்று தெரியவருகிறது.

தகப்பன் ஜனாதிபதியாக இருந்ததாலேயே அவரதுபிள்ளைகள் நாமல்,யோஷிந்த ஊரையடித்து உலையில் போட்டார்கள்.

ஒரு சமயம் நான் ஆள் மூலம் நாமல் ராஜபக்ஷவுக்கு சிங்கள இனவாதத்தை பரப்பிவிடுகிறார் என்று குற்றம் சுமத்தி இருந்தேன். எனது குற்றச்சாட்டிற்கு அவர் மழுப்பலாக பதிலனுப்பி இருந்தார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## யாழில் ...

இந்த சர்வதேச தரம் உள்ள கிரிக்கெட் விளையாட்டு அரங்கம் கல்வியங்காடு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்க பொருத்தமான காணிகளுக்குச் சென்று பரிசோதிக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

இருந்த போதும் இன்னும் கிரிக்கெட் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு பொருத்தமான காணி முடிவு செய்யப்படவில்லை என்று தெரிய வருகிறது. இந்த விளையாட்டு அரங்கத்தின் வேலைகள் இந்த வருடம் நவம்பர் மாதம் ஆரம்பமாகி 3 வருடத்திற்குள் நிர்மாணிக்கப் பட்டுவிடும் என்று கூறினார்.

இந்த விளையாட்டு அரங்கம் நிர்மாணிக்க தேவை என கணக்கிடப்பட்ட ரூபா 400 மில்லியன் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டாளர் சபைக்கு சொந்த மான பணத்திலே கட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக திலங்கா சுமதிபாலா தெரிவித்தார்.

மேலும் தினச்செய்தி அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட்போட்டி, ஒரு நாள் சர்வதேச போட்டி, 20/20 போட்டி மூன்றிலும் இலங்கை அணி படு தோல்வி அடைந்தது இதற்கு காரணம் என்ன என்று கேட்ட போது தற்சமயம் உள்ள இலங்கை கிரிக்கெட் அணி மிகவும் இளைய வீரர்களை கொண்ட அணி ஆகும். இலங்கையின் முன்னாள் சிரேஷ்ட வீரர்களான குமார் சங்ககாரா, மஹேல ஜெவர்த்தனா ஆகியோர் திடீரென விலகி ஓய்வு பெற்று விட்டார்கள். அவர்களின் இடத்தை இட்டு நிரப்ப சிறிது காலம் எடுக்கும் என்றார்.

சிரேஸ்ட வீரர் மஹேல ஜெவர்த்தனா ஓய்வு பெற்று விலகும் காலத்திற்கு முன்பு தொடக்கம் முதல் ஆட்ட வீரராக (One down) விளையாடி வந்தார். ஓய்வு பெறும் சில காலத்திற்கு முன்னர் தனது பந்தடிக்கும் இடத்தை ஒரு இளம் வீரரை விட்டு அவர் 6 ஆவதாக (six - down) விளையாடி இருந்தால் இளம் வீரர்களுக்கு சிறந்த பயிற்சி கிடைத்திருக்கும் என்றார்.

அவ்வாறு நிதானமாக திட்டமிட்டு செயற்பட்டிருந்தால் இன்று கிரிக்கெட் அணி இளம் வீரர்கள் தோல்வி அடையும் நிலை ஏற்பட்டிருக்காது என்றும் விரைவில் அதற்கு முடிவு வந்து விடும் என்றார்.

மேலும் இங்கிலாந்து சென்ற இலங்கை அணிக்கு தலைமை வகித்த அஞ்சலே மெதியூஸ் அணி படுதோல்வி அடைந்து விட்டது. எனவே அஞ்சலே மெதியூஸை நீக்கும் திட்டம் இருக்கிறதா என்று தினச்செய்தி கேட்ட போது, அவ்வாறு ஒரு திட்டமும் இல்லை தலைவர்களை அடிக்கடி மாற்றிக் கொண்டு இருக்க முடியாது என்று தெரிவித்தார்.

இளைய தலைமுறை கிரிக்கெட் வீரர்களை ஊக்குவிப்பதே தனது முக்கிய நோக்கம் என்றும் அதன் படியே தான் யாழ்ப்பாணத்தில் சர்வதேச விளையாட்டு அரங்கம் அமைக்க தீர்மானிக்க திட்டமிட்டுள்ளதாகவும் திலங்க சுமதிபால கூறினார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## மேலும் ...

அத்துடன் அங்குள்ள சிறைக் கைதிகள் வெளியார்களுடன் தொடர்பு கொள்ள வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அந்தத் திட்டத்தை தொடர்ந்து, கொழும்பில் உள்ள மகசீன், கொழும்பு றிமான்ட் கைதிகளுக்கு தொலைபேசிகள் வைக்க முன்வந்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

சிறை கைதிகளுடன் வெளியாட்கள் தொடர்பு கொள்வதிலும் பார்க்க, சிறை கைதிகள் வெளியாட்களுடன் தொடர்பு கொள்வதற்கு தான் முன்னுரிமை வழங்கப்படுவதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தினச்செய்திக்கு கூறினார்.

ஒவ்வொரு சிறைக்கைதிகளும் மூன்று பேர்களுடன் தொடர்பு கொள்ள வசதிகள் செய்யப் படும் என்று கூறினார். கைதிகளினுடைய தாய், தந்தை, சகோதரர்கள் இல்லாவிட்டால் மனைவி பிள்ளைகளுடன் தொடர்பு கொள்ள தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கதிட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இவ்வாறு தொலைபேசி வசதிகளை சிறையில் உள்ளவர்களுக்கு செய்ய அவர்களது உறவினர்கள் முன் கூட்டியே பணம் செலுத்தி தொலைபேசி அட்டைகளை எடுத்துக் கொடுக்க வேண்டும் என்றும், இவ்வாறு கொடுக்கப்பட்ட அட்டைகள் மூலம் சிறை நிர்வாகத்திடம் கொடுத்து மூன்று தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று கூறினார்.

ஒரு சிறைக்கைதி ஆகக்கூடியது அவர் குறிப்பிட்ட ஓர் இலக்கத்துடன் 30 நிமிடங்கள் பேச அனுமதிக்கப்படுவார் என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறு தொலைபேசியில் சிறைக்கைதிகள் பேசுவது பதிவுசெய்யப்படும் என்றும், சிறைச்சாலை நிர்வாகம் அந்தப் பேச்சுகள் பரிசீலிக்கப்படும் என்றும் மேலும் அவர் கூறினார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## வடக்கில் ...

இடம்பெயர்ந்த குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 550 சதுர அடியில் வீடுகள் கட்டுவது என்றும், இந்த ஒவ்வொரு வீடும் நிர்மாணிப்பதற்கு ரூபா பத்து லட்சம் தேவைப்படும் என்றும் கூறினார்.

இந்த வீடுகள் ஒவ்வொன்றும் 2 படுக்கைய்றைகள், ஒரு வரவேற்பறை, குசினி முன்னால் விறாந்தை மற்றும் பின் பக்கமாக தனியாக மலசல கூடம், குளியலுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று கூறினார்.

இந்த வீடுகள் யாவும் சீமெந்தினாலும், ஓட்டினாலும் கட்டப்படும் என்றும், இவைகளை உரியவர்களே கட்டுவதற்கு பண வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் திரு. சிவஞானசோதி கூறினார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## மேலும் ...

தற்சமயம் ஸ்ரீ லங்காவில் 4.5 மில்லியன் தொலைக்காட்சி பெட்டிகள் உள்ளது என்றும் தற்சமயம் இவைகள் 'அனலொக்' முறையில் இயங்குகின்றன எனவும், வருங்காலத்தில் டிஜிட் டல் மயமாக்கினால் தொலைக் காட்சியில் காட்டப்படும் பிம்பங்கள் எல்லாம் மிகவும் தெளிவாக இருக்கும் என்றும் மேலை நாடுகளில் காட்டப்படுவது போல இருக்கும் என்றும் கூறினார்.

மேலும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு தொலைக்காட்சி பெட்டிகளுக்கு அருகில் டிஜிட்டல் பெட்டிகள் வைக்கப்பட வேண்டும் என்றும் இந்த டிஜிட்டல் பெட்டிகள் ஒவ்வொன்றும் அமெரிக்க டொலர் 20 முடியும் என்றும் கூறினார்.

இந்த டிஜிட்டல் பெட்டிகளை தனியார் விற்பனையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம் என்றும் இந்தப் பெட்டிகளை விற்பனை செய்வதற்கு நாடு முழுவதும் 2, 3 விற்பனை நிலையங்களுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கேபிள் டிவி

அதே நேரத்தில் கேபிள் டிவி சேவையில் மாற்றம் கொண்டு வருவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த கேபிள் டிவிகளில் வெளிநாடுகளில் உள்ள சனல்களை இணைத்து கொண்டு இங்கே சேவைகளை விடும் பொழுது அந்த சனல்களின் அந்த நாடுகளில் ஒளிபரப்பப்படும் விளம்பரங்கள் சேர்த்து இங்கே கேபிள் டிவி நடத்துபவர்கள் ஒளிபரப்புவது ஒரு பிரச்சினையான விடயம் என்று தொலைக்காட்சி ஒழுங்கு முறை ஆணையகத்தின் தலைவர் சுனில் ஸ்ரீசேனா கூறினார்.

இந்தியாவில் இருந்து, குறிப்பாக தமிழ் நாட்டில் இருந்து இயங்கி வரும் சனல்களை கேபிள் டிவி காட்டுகின்ற பொழுது, அந்த சனல்களின் விளம்பரங்களும் காட்டப்படுகின்றன என திரு. ஸ்ரீசேனா கூறினார்.

ஆனால் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்து வெளிவருகின்ற வருகின்ற சனல்களில் காட்டப்படுகின்ற பொழுது விளம்பரங்கள் அங்கு காட்டப்படுவதில்லை அவ்வாறு தான் செய்ய வேண்டும். அது தான் ஒழுங்கானது என்று தொலைக்காட்சி ஒழுங்கு முறை ஆணையகத்தின் தலைவர் சுனில் ஸ்ரீசேனா குறிப்பிட்டார்.

## விஷேட சந்திப்பு

(கி.கிஷாந்தன்)

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் அவர்கள் பங்குபற்றும் விசேட மக்கள் சந்திப்பொன்று ஹட்டன் நகர சபை மண்டபத்தில் 11. 07.2016 அன்று காலை 11 மணியளவில் இடம்பெற்றது.

இதில் பெருந்திரளான மக்கள் தமது குறைகள் தொடர்பில் அமைச்சரை நேரில் சந்தித்து தெளிப்படுத்தினர். ஹட்டன் பிரதேசத்தை அண்டிய மக்கள் தங்களது பிரச்சினைகளை அமைச்சரிடம் முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக் கடலில் மீன்பிடிக்க தமிழக மீனவர்களுக்கு அனுமதியில்லை

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் இலங்கை கடற் பரப்புக்குள் மீன்பிடிப்பதற்கு 75 நாட்கள் அல்ல, 75 நிமிடங்கள் கூட அனுமதி வழங்க இலங்கை அரசாங்கம் தயாராக இல்லையென கடற்றொழில், நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர திட்டவட்டமாக அறிவித்துள்ளார். இலங்கை கடற் பரப்புக்குள் தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதற்கு எக்காரணம் கொண்டும் இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கத் தயாராக இல்லையெனவும், சிலர் வருடத்தில் 75 நாட்கள் இலங்கை கடற்பரப்புக்குள் மீன்பிடிப்பதற்கு தமிழக மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்படுமென கூறிவரும் கதைகள் முற்றிலும் பொய்யானது, வதந்தி எனவும் அமைச்சர் தெரிவித்தார்.


இலங்கை கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளை சுட்டிகாட்டி வட மாகாண மீனவர்கள் நேற்று முன்தினம் வட மாகாண சபைக்கு முன்பாக பாரிய ஆர்பாட்ட மொன்றை நடத்தினர். இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொடர்ந்து தெரிவிக்கையில், முப்பது வருடகாலமாக நாட்டில் நடைபெற்ற யுத்தத்தினால் அதிகளவான இழப்புக்களை வடபகுதிமீனவர்கள் சந்தித்திருந்தனர்.

பெரும்பாலான வடபகுதி மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாது தமது மீன்பிடி நடவடிக்கைகளை கைவிட்டனர். இக் காலப்பகுதியில் தமிழக மீனவர்களே இலங்கை கடற்பரப்புக்குள் நுழைந்து மீன் பிடித்தார்கள். இதனால் அன்றும் எமது மீன் வளம் சூறையாடப்பட்டது.

தற்போதும் தமிழக மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் தங்களுடைய மீன்பிடிவள்ளங்கள், இழுவை படகுகள், வலைகள் போன்ற உபகரணங்களுடன் அத்துமீறி நுழைந்து மீன் வளத்தை சூறையாடுகிறார்கள். எனவே இலங்கை கடற்படையினரும், கரையோர பாதுகாப்பு அதிகாரிகளும் இணைந்து அவர்களை கைதுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.

எனவே அத்துமீறி இலங்கை கடற் எல்லைக்குள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்திய மீனவர்கள், அவர்களின் மீன்பிடி உபகரணங்களுடன் கைது செய்யப்படுவார்கள். இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்தாலும், அவர்களுடைய மீன்பிடி உபகரணங்கள்,



மீன்பிடிவள்ளங்கள், இழுவை படகுகள், வலைகள் போன்றவை எக்காரணம் கொண்டும் இலங்கை அரசாங்கம் விடுவிக்காது.

பல வருடங்களாக நிலவி வரும் இலங்கை - இந்திய மீனவப்பிரச்சினை தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் ஆலோசனைகள், வேண்டுகோள்கள் முன் வைக்கப்படுகின்றன. எனினும், அது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த நிறுவனமான மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சினால் எந்தவித தீர்மானங்களும் எட்டப்படவில்லை. குறைந்தபட்சம் ஒரு கலந்துரையாடல் கூட நடைபெறவில்லை. எனவே யார் எந்தவித அறிவிப்பை விடுத்தாலும் அதை மீனவர்கள் நம்ப வேண்டிய அவசியமில்லை.

மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சினால் எடுக்கப்படும் ஒவ்வொரு தீர்மானமும் மீனவ சங்கங்களுடன் கலந்துரையாடப்பட்ட பின்னரே எடுக்கப்படும். எனவே இது தொடர்பில் மீனவர்கள் குழப்பமடைய தேவையில்லையெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேசம் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் விடயத்திலும் தமது பார்வையைச் செலுத்த வேண்டும்

## நிஷா பிஷ்வாலிடம் றிசாத் வலியுறுத்து

(சுஐப் எம்.காசிம்)

இனப் பிரச்சினை தீர்வு முயற்சியில் எந்தவொரு சமூகமும் பாதிக்கப் படாத வகையில் தீர்வுத் திட்டம் உருவாக்கப்பட வேண்டுமெனவும், இதன் மூலமே நிரந்தர சமாதானத்தை பேண முடியும் எனவும் கைத்தொழில், வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.



இலங்கை வந்துள்ள அமெரிக்க பிரதி இராஜாங்க செயலாளர் நிஷா பிஷ்வாலை பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் சந்தித்தபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்த சந்திப்பில் அமெரிக்க உதவிச் செயலாளர் டொம் மலி நவ்ஸ்கியும் பங்கேற்றிருந்தார்.

யுத்த முடிவுக்குப் பின்னர் இலங்கையின் தீர்வு முயற்சியில் சர்வதேசம் அக்கறைகாட்டி வருகின்றது. இந்த நாட்டிலே இனப்பிரச்சினையின் விளைவாக இங்கு வாழும் இன்னொரு சமூகமான முஸ்லிம் சமூகமும் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளது. இந்த விடயங்களை இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தின் தலைவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் சுட்டிக்காட்டி இருக்கின்றனர்.

வடமாகாணத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் இன்னும் அகதி முகாம்களிலேயே வாழ்கின்றனர். சமாதான சூழல் ஏற்பட்ட பின்னரும் அவர்கள் தமது தாயகத்தில் இன்னும் மீளக்குடியேற்றப்படவில்லை. இவர்களைப் பற்றி சர்வதேசம் எந்த விதமான அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை. நானும் ஒரு அகதியே. இந்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். எனவே இந்த மக்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும். யுத்தத்தினால் வடமாகாணம் மட்டுமல்ல கிழக்கு மாகாணத்தில் வாழும் மூவின மக்களுமே பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த வகையில் இவர்களுக்கும் பொருத்தமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் நடைபெற்ற இந்த சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், சுமந்திரன் எம்.பி, டக்ளஸ் தேவானந்தா எம்.பி, அமைச்சர்களான டிலான், சுசில் பிரேம ஜயந்த, உப சபாநாயகர் திலங்க சுமதிபால ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

# ஹற்றனில் விபத்து

(க.கிஷாந்தன்)

ஹட்டன் கொழும்பு வீதியில் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டி தியகல பிரதேசத்தில் நேற்று 14ம் திகதி மாலை வேலையில் வீதியை விட்டு விலகி சென்று தடம் புரண்டதால் அதில் பயணித்த 5 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகி கினிகத்தேன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் தியகல பொலிஸ் பரிசோதனை பகுதிக்கு உட்பட்ட பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் சிறிய குழந்தை ஒன்றும் பெண் ஒருவரும் ஆண்கள் 3 பேரும் படுகாயம் அடைந்துள்ளனர்.

# இந்தியா, பங்களாதேஷ், மியான்மருக்கு பூகம்பத்தால் பேராபத்து!

(டாக்கா)

பங்களாதேஷை மையமாகக் கொண்டு மிக பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய பூகம்ப அபாயம் இருப்பதாக ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். வங்கதேசமும் கிழக்கு இந்தியாவும் கங்கை மற்றும் பிரம்மபுத்திரா நதிப் படுகைகள் மீது அமைந்துள்ளன.

இந்த பகுதிகள் நிலநடுக்கத்தை தாங்க முடியாத லேசான பகுதிகள். தற்போது இந்த பகுதிகளில் கீழே உள்ள டெக்கானிக் பிளேட் எனப்படும் தட்டுகளின் அழுத்தம் மிகவும் அதிகரித்து வருவதற்கான ஆதாரங்கள் உள்ளன என்கின்றனர் புவியியல் ஆய்வாளர்கள்.

இதனால் மிக பயங்கரமான பூகம்பம் ஒன்று ரிக்டரில் 8.2 முதல் 9 அல்லது 9 க்கும் அதிகமானஅளவுக்கு பதிவாகும் அபாயம் உள்ளது.


இந்தியப் பெருங்கடல் மற்றும் இந்தியாவின் பெரும்பகுதிகளைக் கொண்டுள்ள ராட்சத கண்டத்தட்டு வடக்கு நோக்கி முட்டி மோதி நகர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த மோதலே இமயமலை வளர்வதற்கு காரணமாகவும் இருந்ததாம்.... கடந்த ஆண்டு நேபாளத்தில் 9000 உயிர்கள் பலி கொள்ளப்பட்டதற்கும் காரணமாம்.

இதுவரை சிலி பூகம்பம், 2004 சுமாத்ரா பூகம்பம் - சுனாமி, 2011 இல் புகுஷிமா பூகம்பம் ஆகியவை பயங்கர விளைவுகளைஏற்படுத்தியிருந்தன.

தற்போது வங்கதேசத்தை மையமாக கொண்டு உருவாகக் காத்திருக்கும் கண்டத் தட்டுகளின் அழுத்தம் என்பது சுமார் 400 ஆண்டு காலமாக நிகழ்ந்து கொண்டிருப்பதாகும். இதனால் மிகப் பெரிய பூகம்ப பிரளயத்தை இந்தியா, வங்க தேசம் மட்டுமின்றி மியான்மரும் கூட எதிர்கொள்ளத்தான் போகிறது சுமார் 14 கோடி பேர் பாதிக்கப்படுவர் என எச்சரிக்கின்றனர் புவியியலாளர்கள்.

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி: பிரிட்டனில் பெண் பிரதமர் பதவி ஏற்ற பின் ஏதாவது முன்னேற்றம் ஏற்படுமா?**

பிரதீபா, மல்லாகம்.

பதில்: பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும்.

**கேள்வி: கைது செய்யப்படும் அரசியல் வாதிகள் சிரித்த முகத்துடனே செல்வ தன் காரணம் என்ன?**

மதன், மட்டக்களப்பு.

பதில்: அவர்கள் தாங்கள் தவறு செய்ய வில்லை என்று வெளியில் காட்டவும், அழுவதில் எந்தவிதமான பிரயோசனம் இல்லை என்று தான் அவ்வாறு சிரித்த முகத்துடன் செல்கிறார்கள்.

**கேள்வி: ஊடகங்கள் ஊகத்துக்கு நாமல் கைது செய்யப்பட்டது முற்றுப் புள்ளி வைக்குமா? அடுத்தது யார்?**

முரளி, திருகோணமலை.

பதில்: இது ஒரு தொடர் கதையாகவே சென்று கொண்டு இருக்கும்.

**கேள்வி: வெளிநாட்டுக்கு சென்று வேலை செய்யும் இலங்கை பெண்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. இது நன்மையா? பாதிப்பா?**

மைதிலி, யாழ்ப்பாணம்.

பதில்: பெண்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் அவர்களை வெளிநாடுகளுக்கு வேலைக்காக அனுப்பி கேவலப்படுத்தக் கூடாது.

**கேள்வி: ஓமந்தை - தாண்டிக்குளம் இடையிலான கயிறிழுத்தல் முடிவுக்கு வந்துள்ளது. இனியாவது வடமாகாண உறுப்பினர்கள் ஒற்றுமையாக செயற்படு வார்களா?**

மேனகா, வல்வெட்டித்துறை.

பதில்: அவர்களின் ஒற்றுமை என்ன என்று சொல்லத் தெரியவில்லை.

**கேள்வி: ஒலிம்பிக்குக்குச் செல்லும் இலங்கை வீரர்கள் பதக்கம் வாங்கு வார்களா?**

தீபன், வட்டுக்கோட்டை.

பதில்: இது வரையில் ஸ்ரீ லங்கா வீரர்கள் யாருமே ஒலிம்பிக்கில் தங்க பதக்கம் வாங்கவில்லை. வருங் காலத்தில் தொடர்ந்து முயற்சித்தால் நிச்சயமாக தங்க பதக்கம் வாங்க சந்தர்ப்பம் ஏற்படலாம்.

**கேள்வி: தமிழகத்தின் காங்கிரஸ் கட்சியின் தலைவராக குஷ்பு வருவாரா?**

மதுமிதா, சுன்னாகம்.

பதில்: அரசியலில் எதையுமே திட்டவட்டமாக கூறமுடியாது.

**கேள்வி: விஜயகாந்த் இனி தனது கட்சியை கலைத்து விடுவாரா?**

காண்டீபன், நெல்லியடி.

பதில்: விஜயகாந்தை பொறுத்த வரையில் எதுவும் நடக்கலாம்.

**கேள்வி: பேய்ப் படங்கள் பெருமளவு வெற்றிபெறுகின்றன. எல்லோரும் பேயை விரும்பக் காரணம் என்ன?**

ரூபன், நீர்வேலி.

பதில்: மனுசர்களை நம்பமுடியாது என்பதனால் நம்ம ஆட்கள் பேய்களை நம்ப முன் வந்திருக்கலாம்.

**அரசியல், சினிமா, விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.**

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**அரசகேசரி**
**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி,*
*சுன்னாகம்.*

# 6 வயது சிறுமியின் வியக்க வைக்கும் உலக சாதனை!

பதஞ்சலி புக் ஆஃப் வேல்டு ரெக்கார்ட்ஸ் மற்றும் ருத்ர சாந்தி யோகாலயம் மூலம் பயிற்சிப் பெற்ற இயைனியா அருண் என்ற 6 வயதே ஆன சிறுமி புதிய உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

மூன்று வயது முதலே தன் தாயார் யமுனா தேவியுடன் இணைந்து தினமும் காலை நேரங்களில் யோகா மற்றும் தியானத்தை விளையாட்டாகக் கற்றுக் கொள்ள ஆரம்பித்துள்ளார் இயைனியா.

தற்போது திருச்சியில் வசித்துவரும் அவரை, பெற்றோர் முறையான பயிற்சி அளிக்க யோகரத்னா கிருஷ்ணகுமார் நடத்திவரும் பயிற்சி வகுப்புகளில் சேர்த் துள்ளனர். இதையடுத்து கடந்த ஒரு வாரமாக முட்டை மீது பத்மாசனத்தில் அமர்ந்து பயிற்சி பெற்றிருக்கிறார்.



அண்மையில் திருச்சி சங்கம் ஹோட்டலில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு பத்திரிகையாளர்கள் கூடியிருக்க, மக்கள் முன்னிலையில் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. ஒரு மேடையில் 30 முட்டைகள் கொண்ட தட்டு வைக்கப்பட்டது பின் அதன் மீது சிறுமியை பத்மாசனம் நிலையில் இருவர் தூக்கி அமர வைத்தனர்.

பிறகு சிறுமி 30 நிமிடங்கள் தொடர்ந்து முட்டைகள் மீது அமர்ந்து புதிய சாதனை படைத்தார்.

இதனை தொடர்ந்து பேசிய முனைவர். அசோகன், 'இதுவரை யாரும் செய்யாத செயலை செய்து காட்டுவதே சாதனையாகின்றது. முடியும் என்று நினைத்து உரிய பயிற்சிகள் அளித்தால் எந்த ஒரு செயலையும் சிறப்பாக செய்ய முடியும்.

இவ்வகையில் சிறுமி இயைனியா வின் திறமையைக் கண்டறிந்து வெளிக் கொண்டுள்ள வந்ததில் யோகரத்னா கிருஷ்ணகுமாருக்கு பாராட்டுக்கள்' என்றார்.

# பிரான்ஸில் பயங்கரவாத தாக்குதல்

## 80 பேர் பலி 100 பேர் காயம்




பிரான்ஸின் நைஸ் நகரில் மக்கள் கூட்டம் நிறைந்த பகுதியில் பயங்கரவாதி ஒருவன் கெண்டெய்னர் லொறியை வேக மாக ஓட்டியதால், 80 பேர் உயிரிழந்தனர். 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பிரான்ஸில் ஆண்டுதோறும் ஜூலை 14 ஆம் திகதி பாஸ்டில் நாள் கொண் டாடப்படுவது வழக்கம். தேசிய விடுமுறை தினமான இந்நாளில், வாணவேடிக்கை நிகழ்ச்சிகள் நடைபெறும். வாண வேடிக்கை நிகழ்ச்சியை பார்த்துவிட்டு திரும்பிக்கொண்டிருந்த மக்கள் மீது வேக மாக வந்த கெண்டெய்னர் லொறி ஒன்று பயங்கரமாக மோதியுள்ளது.

மொனாக்கோ நகரில் இருந்து சுமார் 13 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள நீஸ் நகர மக்களும் நகரின் பிரதான சாலையில் கூட்டமாக திரண்டு தேசிய தினத்தை மகிழ்ச்சியாக கொண்டாடினர். அப்போது, அந்த சாலை வழியாக வேகமாக வந்த ஒரு கனரக வாகனம் மக்கள் கூட்டத்துக்குள் பாய்ந்தது.

வேகம் சற்றும் குறையாமல் திரளாக இருந்த மக்களை மோதித் தள்ளியபடி சுமார் 2 கிலோமீட்டர் தூரம் அந்த வாகனம் முன்னேறிச் சென்றது. இதில் ஏராளமான மக்கள் வாகனத்தின் டயர்களுக்கு அடியில் சிக்கி நசுங்கினர். தீவிரவாதிகளின் சதி வேலை என கருதப்படும் இந்த கொடூர தாக்குதலில் முதலில் 60 பேர் உயிரிழந் ததாக தெரியவந்தது. நூற்றுக்கும் அதிக மானோர் காயமடைந்துள்ளனர். அந்த கனரக வாகனத்தை ஓட்டி வந்தவரை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.




அந்த தீவிரவாதி ஓடிவந்த வாகனத்தை பொலிஸார் சோதனையிட்ட போது சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. அதில், தாக்குதல் நடத்திய நபர் நீஸ் பகுதியில் வசித்து வந்தது தெரியவந்துள்ளது. 31 வயதான அவர், துனிசியா நாட்டை சேர்ந்த வர் எனவும் பிரெஞ்சு குடியுரிமையுடன் அங்கு வசித்து வருவதாகவும் பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வரு கின்றன.

# அமிர்தலிங்கம்

## தொடர்ந்தும் மறக்கப்படுகின்றார்

எழுதியவர் :
K. T. ராஜசிங்கம்



'புலிகள் தான் என்னுடைய கணவனைக் கொன்றார்கள்" இவ்வாறு மங்கையர்க்கரசி தனது கணவன் அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தை நினைவு கூர்ந்தார். சிறந்த பெரிய தமிழ் தலைவரான அமிர்தலிங்கத்தின் கொலை சம்பந்தமாக முதன் முதலில் 2004 ஆம் ஆண்டு அமிர்தலிங்கத்தின் மனைவியான மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் எனக்கு கூறினார்.

2004 ஆம் ஆண்டு தான் முதன் முதலாக அமிர்தலிங்கத்தின் மனைவி மங்கையர்க்கரசி தான் கொலைகளை கண்ணுற்ற விபரங்களை பற்றி அவர் தெரிவித்ததை இன்று இங்கே குறிப்பிடுவது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன்.

அமிர்தலிங்கம் கொலை செய்யப்பட்டது 13 யூலை 1989 ஆம் ஆண்டாகும். அன்று தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த மூன்று கொலையாளிகளான விசு, அலோசியஸ், சிவகுமார் ஆகியோர் கொழும்பில் யோகேஸ்வரன் வசித்து வந்த அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றில் சென்று அமிர்தலிங்கத்தைச் சுட்டு வீழ்த்தினார்கள். அதே நேரத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான யோகேஸ்வரனையும் சுட்டு வீழ்த்தினார்கள்.

அத்துடன் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவரான எம். சிவசிதம்பரமும் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானார்.

இந்தக் கொலைகள் சம்பந்தமாக அவரது மனைவியான மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் 13 யூலை 1989 ஆம் ஆண்டு நடந்த விடயங்கள் பற்றி முதன் முதலாக மனம் திறந்து கூறினார்.

அவர் கூறிய விபரங்களை அன்று 13 யூலை 2004 ஆம் ஆண்டு ஆங்கில ஊடகமான ஏசியன் ரிபியூனில் வெளியிட்டேன்.

சென்ற 13 ஆம் திகதியும் அமிர்தலிங்கம் கொலை செய்யப்பட்ட தினம் வந்து போயிற்று. அந்த பெரும் தலைவனை, யாருமே கண்டு கொள்ளவில்லை. எனவே தான், தமிழ் மக்களுக்கு உண்மைகளைத் தெரியப் படுத்த வேண்டும் என்ற காரணத்தினால் நான் இங்கே அந்த பேட்டியின் தமிழ் ஆக்கத்தை தருகிறேன். இது திருமதி மங்கையர்க்கரசியின் வார்த்தைகளாக பிரசுரிக்கப்படுகிறது.

'நாங்கள் புள்ளோஸ் வீதியில் உள்ள கறுவாத் தோட்டத்தில் ஒரு தொடர் அடுக்கு மாடி கட்டிடத்தில் வசித்து வந்தோம். நாங்கள் கீழ் மாடியிலும் எங்களுக்கு மேல்மாடியில் யோகோஸ்வரனும் அவரது மனைவியும் வசித்து வந்தார்கள்.



அன்றுமாலை 6.30 மணியளவில் எனது கணவரும் திரு. சிவசிதம்பரமும், மாவை சேனாதிராஜாவும் தொலைக்காட்சியில் ஒளி பரப்பாகிக் கொண்டிருந்த நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது யோகேஸ்வரனின் உதவியாளர் ஒருவர் ஒரு சிறிய கடிதத்தை கொண்டு வந்து எனது கணவரிடம் கொடுத்தார். அதையடுத்து எனது கணவரும் சிவசிதம்பரமும் யோகேஸ்வரன் வசித்திருந்த மாடிக்குச் சென்றார்கள்.

அவர்கள் அவ்வாறு போகும் பொழுது சேனாதியிடம் மேல்மாடியில் யார் வந்திருக்கிறார்கள் என்று வினாவினேன் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று கூறினார்.

சில நிமிடங்கள் சென்ற பின்னர் சேனாதியுடன் தங்கியிருந்த கௌரி என்ற பையன் வந்து அவரை ஒரு பக்கம் அழைத்து சென்று சேனாதியின் காதில் இரகசியம் ஏதோ கூறினான். ஆனால் அவர்கள் என்ன பேசினார்கள் என்று எனக்குக் கேட்கவில்லை.

அதையடுத்து, மீண்டும் சேனாதி வந்து முன்பு அமர்ந்திருந்த சோபாவில் அமர்ந்தார். அவ்வாறு அவர் அமர்ந்த பிற்பாடு சில நிமிடங்களில் துப்பாக்கி சூட்டுச் சத்தம் கேட்டது. நான் உடனே மேல் மாடிக்கு விரைந்தேன். அவ்வாறு நான் போகின்ற பொழுது மேலும் சில துப்பாக்கிச் சத்தங்களைச் செவி மடுத்தேன். முதல் மாடியிலும் எமது தொடர் மாடிக்கு வரும் வாசலிலும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டேன்.

நான் மேல் மாடி சென்று பார்த்த போது எனது கணவர் ஒரு சோபாவில் ஆடாமல் அசையாமல் வீற்றிருந்தார். சிவசிதம்பரம் ஐயா நிலத்தில் விழுந்து துடித்துக் கொண்டிருந்ததை பார்த்தேன். நான் ஒரு சோபாவில் இருந்த தலையணையை எடுத்து சிவசிதம்பரம் ஐயாவின் தலைக்கு வைத்து விட்டு எந்த வித அசைவுமின்றி சோபாவிலிருந்த எனது கணவனின் முகத்தை தடவினேன். அப்பொழுது அவர் வாய் திறக்க இரத்தம் பொலபொல என வெளிவரத் தொடங்கிற்று. எனது கணவனின் தலையை எனது இரண்டு கைளால் பிடித்துக் கொண்டு செய்வதறியாது திண றினேன்.

அதே நேரத்தில் அமைதியாக சோபாவில் ஆடாமல் அசையாமல் அமர்ந்திருந்த யோகேஸ்வரனிடம் இருந்து கொட்டாவி சத்தம் வெளிவருவதை செவிமடுத்தேன். அது தான் யோகேஸ்வரன் வெளியிட்ட கடைசி ஓசை என்பது அப்பொழுது எனக்கு தெரியவில்லை.

அதேநேரத்தில் கீழ்மாடியில் துப்பாக்கி சூட்டு சத்தம் கேட்டது. கீழ் மாடியில் இருந்த பொலிஸ் காவலர்கள் ஓடிவந்து எனது கணவன் மற்றும் யோகேஸ்வரன், சிவசிதம்பரம் ஐயா ஆகியோரைத் தூக்கிக் கொண்டு போய் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு வைத்தியசாலைக்கு விரைந்தார்கள். அவர்கள் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு செல்வதற்கு முன்னரே எனது கணவரும், யோகேஸ்வரனும் இறந்துவிட்டார்களாம்.


இந்தக் கொலைக்கு தமிழீழ விடுதலை புலிகளைச் சேர்ந்த கொலையாளிகளான விசு, அலோசியஸ், சிவகுமார் ஆகிய மூவருமே காரணம் என்று தெரியவந்தது. கொலை செய்து விட்டுத் தப்பி ஓட முயன்ற மூவரையும் பொலிஸ் பாதுகாவலர்கள் சுட்டு கொன்றார்கள்.


எனது கணவனின் இறப்பு மதிப்பிட முடியாத இழப்பு. அவர் ஒரு சிறு எறும்புக்குக் கூட எந்த வித துன்புறுத்தலும் செய்திருக்க மாட்டார்.

பிரபாகரனை அவர் தனது சொந்தப் பிள்ளை போல நேசித்தார். அவனை நம்பினார். ஆனால் அந்தப் பிரபாகரன் அனுப்பிய கொலையாளிகள் எனது கணவனைச் சுட்டு வீழ்த்தி விட்டார்கள்.

இவ்வாறான நம்பிக்கைத் துரோகச் செயல்களுக்கு ஆண்டவன் நிச்சய மாக தண்டனை வழங்குவான்.


கணவனின் கொலையினால் அவர்களால் தமிழீழத்தை அடையக் கூடியதாக இருந்ததா? என்று கேள்வி எழுப்பினார்.





அதே நேரத்தில் இந்தக் கொலையுடன் சேனாதி முக்கிய பங்கு வகித்தார் என்ற சந்தேகம் என் மனதில் நிழலாடிக்கொண்டு இருந்தது என்றும் அன்றைய பேட்டியின் போது மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் கூறினார்.


இவ்வாறு எனக்கு பேட்டி தந்த திருமதி மங்கயைர்க்கரசி 10 திகதி மார்ச் மாதம் 2016 ஆம் ஆண்டு காலமானார்.



# சொன்னார்கள் சொன்னார்கள்



படித்த பக்குவமான முஸ்லிம் ஒருவரை எமது முதலமைச்சராக ஏற்றுக்கொள்வதற்கு நாம் எப்போதும் தயாராகவிருக்கின்றோம். எமது பெரும்பான்மை பாதுகாக்கப்படுவதை சந்தேகத்துக்கு இடமின்றி உறுதிப்படுத்துவதாக இருந்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும். அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதை அன்பாகவும் தாழ்மையாகவும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.



போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்த விசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படமாட்டார் என்றும் போரின் போது படையினர் ஒருபோதும் கொத்தணிக் குண்டுகளைப் பயன்படுத்தவில்லை எனவும் அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.



தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளுக்கான போராடுவோம் என்று ஜேவிபி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அநுரகுமார திஸநாயக்க, யாழ் வணிகர் கழக தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்துரையாடியபோது தெரிவித்தார்.




வட்டுவாகலில் சரணடைந்தோர் விவரத்துக்குப் பதிலாக புனர்வாழ்வு பெற்று விடுவிக்கப்பட்டவர்களின் விவரங்களைக் கொண்டு வந்த முல்லைத்தீவு 58 ஆம் படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சாணக்க குணவர்த்தனவை, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எஸ்.எம்.ஷம்சுதீன் கோபமடைந்து ஏசினார். இறுதி யுத்தத்தில் காணாமற்போன அனந்தி சசிதரனின் கணவர் எழிலன் (சின்னத்துரை சசிதரன்) உள்ளிட்ட 05 பேரின் உறவினர்கள் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு, இன்று வியாழக்கிழமை (14) முல்லைத்தீவு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



தமிழக சட்டசபைத் தேர்தலில் படித்தவர், படிக்காதவர் என அனைவருமே காசு வாங்கிக்கொண்டுதான் ஓட்டுப் போட்டனர். இதனால்தான் நாங்கள் தோற்க நேரிட்டது. நேர்மையாகதேர்தலை எதிர்கொண்ட எங்களுக்கு மக்கள் கொடுத்த பரிசு தோல்விதான் என்று விஜயகாந்த்தின்மனைவி பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.



பொறுப்புக்கூறல் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்டிருத்தல் தொடர்பாக,அரசாங்கத்தின் பல்வேறு தரப்புகளிலும் பல்வேறு கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டுவரும்நிலையிலும் கூட, பல்வேறான பொறிமுறைகள் அமுல்படுத்தப்படும்வரை காத்திருந்தே, அது தொடர்பான கருத்துகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்துமென நிஷா தேசாய் பிஸ்வாலுக்கு எடுத்துரைத்ததாக, கூட்டமைப்பின் எம்.பியான எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.



இது சந்தேக நபர்களை குற்றவாளிகளாக்கும் யுகம் என்றும், யாரை வேட்டையாடினாலும், யாரை கைது செய்தாலும் தமது பயணத்தை நிறுத்தப் போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.




## அங்கும் இங்கும்

# தங்கச் சட்டை தொழிலதிபர் கொலை

தங்கத்தால் செய்யப்பட்ட சட்டையை அணிந்து பரபரப்பை ஏற்படுத்திய புனே தொழிலதிபர் தத்தா புகே மர்ம நபர்களால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். புனே அருகே உள்ள பிம்ப்ரியைச் சேர்ந்தவர் தத்தா புகே. சிட்பண்ட் தொழில் செய்து வந்தார். இவரது மனைவி சீமா, புனே மாநகராட்சி கவுன்சிலர்- தேசியவாத காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்.

5 கிலோ எடையில் கழுத்து, கை மற்றும் இடுப்பில், தங்க நகைகளை அணிந்து வந்து கொண்டிருந்தார் தத்தா புகே. கடந்த 2013 இல் 3.25 கிலோ தங்கத்தில் சட்டையை உருவாக்கி அதை அணிந்து பரபரப்பை கிளப்பியிருந்தார்.


கடந்த வியாழக்கிழமை 11.30 மணியளவில் பிறந்த நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு நண்பர் ஒருவர் தத்தா புகேவை அழைத்திருந்தார். இந்நிகழ்ச்சிக்காக மகனுடன் திறந்த வெளி மைதானம் ஒன்றுக்கு தத்தா புகே சென்றார்



அப்போது 12 பேர் அடங்கிய கும்பல் புகே மீது கற்கள் மற்றும் பயங்கர ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தியது. இதில் மகன் கண்முன்பே தத்தா புகே பலியானார்.

தத்தா புகேவின் சிட்பண்ட் நிறுவனத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளால் அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என கூறப்படுகிறது. இவரது நிதிநிறுவனத்தில் தொழிலதிபர்கள் பலரும் முதலீடு செய்திருந்தனர். வழக்கமாக பாது காவலர்களுடன்தான் தத்தாபுகே வெளியே செல்வது வழக்கம். நள்ளிரவு பார்ட்டிக்கு செல்லும்போது அவர்களை தத்தா புகே அழைத்துச் செல்லவில்லை எனவும் கூறப்படுகிறது.

# கை, கால்கள் இன்றி அசத்தும் சிறுவன்



இந்தோனேஷியா மேற்கு ஜாவா பகுதியை சேர்ந்தவர் டியோ சாட்ரியோ (வயது 11) இவருக்கு பிறக்கும் போதே கை,கால்கள் இல்லை. இருந்தாலும் தனது திறமையால் அசத்தி வருகிறார்.


கை,கால்கள் இல்லா விட்டாலும் சிறுவன் பாடசாலைக்குச் சென்று தன் கல்விகளை தொடர்கின்றார்.


இது குறித்து சாட்ரியோவின் தாயார் கூறும் போது ,

நான் இதை எதிர்ப்பார்க்கவே இல்லை, கால்கள் கைகள் மாத்திரமே இல்லை. ஆனால் தன் மகன் திறமையானவன். மற்றைய குழந்தைகள் போல் சாதாரணமாகவே இருக்கின்றான். அவருக்கு கணித பாடத்தில் அதிகம் ஆர்வம் இருப்பதாகவும், சிறந்த நுண்ணறிவு கொண்டவன் எனவும் தெரிவித்துள்ளார்.மருத்துவ செலவுகளுக்கு அரசாங்கம் நிதிகளை வழங்கி உதவி செய்து வருவதாகவும் அவரின் தாயார் கூறியுள்ளார்.

மேலும், பாடசாலை நிறைவடைந்ததும் சக மாணவர்களுடன் இணைந்து விளையாடுவான் என்றும் விளையாடுவதில் மிகுந்த ஆர்வம் உடையவன் என்றும் அவரது தாய் கூறியுள்ளார்.

அதேவேளை இவர் தன் வாய் மூலமே எழுதுவார் என்றும் சிறந்த திறமைசாலி எனவும் பாடசாலை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.






# திடீரென முடிவுற்ற திம்பு பேச்சுவார்த்தை

பிரபாகரன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர். அவருக்கு எப்போதுமே இந்தியா மீது துளியளவும் நம்பிக்கை இல்லை. எப்போதும் சந்தேகக் கண்ணோட்டத்துடன்தான் பார்த்தார். இந்தியாவின் முக்கியத்துவம் பற்றி பிரபாகரன் உணர்ந்திருந்தார். ஆனால் அந்தப் பெரிய நாடு இலங்கையைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைக்க முயற்சிப்பதை மாத்திரம் அவர் விரும்பவில்லை.

இந்த நிர்ப்பந்தத்தை அடுத்து, பூட்டானில் நடைபெறவுள்ள பேச்சுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தூதுக் குழு ஒன்றை அனுப்ப முன்வந்தார். ஆனால் அவர் அந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாமல் விலகி நின்றார்.

பிரபாகரன் தனக்குப் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை இன்மையையும், தான் அதில் கலந்து கொள்ளாமலும், தனது நம்பிக்கையான அன்ரன் பாலசிங்கத்தை அனுப்பி வைக்காமலும் தனது அவநம்பிக்கையை வெளிக்காட்டினார்.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு கனிஷ்ட நிலையில் இருந்த தலைவர்களுள் ஒருவரான லோறன்ஸ் திலகரை அனுப்பி வைத்தார். இதே திலகர் தான் பின்னர் பாரிஸ் நகரில் இருந்த புலிகளின் சர்வதேச அமைப்பின் பொறுப்பாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



இலங்கை அரசாங்கத்துடன் போராளிகள் குழுக்களைப் பேச்சுவார்த்தை நடத்துமாறு இந்தியா நிர்ப்பந்தித்தது. இந்திய உத்தியோகத்தர்களும், ஏனையோரும் பிரபாகரன் இதனால் குழம்பிப்போய் இருக்கிறார் என்ற விடயம் நன்கு புலனாகிற்று.

எல்லாவற்றுக்கும் மேலாக ஆய்வு பகுப்பாய்வு பிரிவினர் (றோ) இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாவிட்டால் அவர்கள் இந்தியாவில் தங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என்று சொன்னார்கள். அவர்கள் கூறியதை அடுத்து பெரிய குழப்பம் உருவாகியது.

அவருடைய இந்தக் குழப்பத்தின் எதிரொலியாக, தமிழ் ஈழப் போராளிகள் குழுத் தலைவர்கள் சகலரும் கேட்கும் விதத்தில் "ஒரு நாள் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் நான் இந்தியாவுக்குப் பாடம் படிப்பிக்காமல் விடமாட்டேன்" என்று கூறினார்.

ஏனைய போராளிக் குழுத்தலைவர்களுடன் பேசுகையில் தான் பூட்டான் பேச்சுவார்த்தைக்கு சென்றால் தமிழர்களின் நன்மைகளை தான் காட்டிக் கொடுத்து விட்டதாக தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கருதுவர் என அவர் கூறினார்.

மேலும், இந்திய வெளிவிவகாரச் செயலர் றொமேஸ் பண்டாரி - இவர் ராஜீவ் காந்தியுடன் மிகவும் நெருக்கமானவர். பிரபாகரனுக்கும் ஏனைய போராளி குழுக்களுக்கும் சென்னையில் வைத்து இந்தப் பேச்சுவார்த்தையின் முக்கியத்துவத்தை றொமேஸ் பண்டாரி விளக்கினார். அவரின் பேச்சை அக்கறையாகச் செவிமடுத்த பிரபாகரன் தனக்கு பேச்சுவார்த்தையில் துளியளவும் நம்பிக்கை இல்லை என்று கூறினார்.

"பண்டாரி சொல்வதை எல்லாம் நான் மிகவும் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தேன். எனது கருத்தை நான் இங்கே தெரிவிக்கிறேன் கடுமையான வசனம் பேசுகிறேன் எனக் கருத வேண்டாம், உண்மை என்னவென்றால், எனக்கு இலங்கை அரசாங்கம் மீது துளியளவும் நம்பிக்கை கிடையாது என்றும், நீங்கள் இந்த விடயத்தில் அக்கறை காட்டுவதால் அம்மா கூட (இந்திரா காந்தி அம்மையார்) எங்களுக்கு நிறைய செய்துள்ளார். எனவே நாங்கள் திம்புவில் (பூட்டான் தலைநகரம்) நடைபெறும் பேச்சுவார்த்தைக்குச் செல்வோம். இது ஒரு அரசியல் ரீதியான நிலைப்பாடு" என்றார்.

**அரசகேசரி**

சென்னையில் இருந்த பூட்டானுக்கு தமிழ்ப் போராளி குழுக்களின் பிரதிநிதிகள் விமான நிலையத்திற்கு சென்ற பொழுது பிரபாகரனும் விமானநிலையத்திற்கு வந்து அவரின் பிரதிநிதியான திலகரை வழியனுப்பி வைத்தார்.

மேலும், திலகரை பார்த்து, "நீ ஒன்றிற்கும் பயப்பட வேண்டாம், அண்ணண் பாலசிங்கம் திம்புக்கு வரவில்லை," என்று கூறினார்.

திம்பு பேச்சுவார்த்தையில, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெவர்த்தனாவின் சகோதரர் ஹரி ஜெவர்தனா இலங்கை தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கினார். தமிழ் போராளிகள் குழுக்களின் சார்பில் அந்த குழுக்களின் இராணுவத் தலைவர்கள் பேச்சுவார்த்தையில் பங்குபற்றவில்லை. அரசியல் குழுகளின் தலைவர்களே பங்குபற்றினார்கள்.

தமிழர் ஐக்கிய விடுதலைமுன்னணியின் சார்பில் அதன் தலைவர் அ. அமர்தலிங்கம் பங்கு பற்றினார். போராளிகள் குழுக்களுக்கும், இலங்கை அரசாங்கத்தின் தூதுக் குழுக்களுக்கும் இடையில் வேறுபாடுகள் தெளிவாகத் தெரிந்தன.

## பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும்

இலங்கை அரசாங்கம் இந்தப் பேச்சுவார்த்தை மூலமாக தமிழர்களுக்கு எந்த விதமான சலுகைகளும் செய்ய முன்வரவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட தமிழர்கள் இந்தப் பேச்சுவார்த்தை பிரயோசனமற்ற ஒன்று என பகிரங்கமாகக் கூறத் தொடங்கினார்கள்.

இருந்த போதும் தமிழ் போராளி குழுக்கள் சவால்களை ஒரு நாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் சமாளிக்கலாம் என்று அரசாங்கத்தின் மீது நம்பிக்கையோடு இருந்தார்கள். இருந்த போதி லும் இந்தியாவினுடைய நிர்ப்பந்தத்தின் பெயரில் இரண்டு பகுதியினரும் சந்திக்க சம்மதித்தார்கள். இந்த பேச்சுவார்த்தையை முன்னிட்டு அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த போது, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்தவர்களுக்கு இலங்கை அரசாங்க படைகளினால் தீங்குகள் ஏற்பட்டது.

போர் நிறுத்தம் நாட்டின் பல பகுதிகளில் அமுலில் இருந்தாலும் அரசபடைகள், மற்றும் போராளிகள் குழுக்களுக்கு இடையில் சிறு சிறு பிரச்சினைகள் நடந்து கொண்டே இருந்தன.

எதிர்பாராத ஒரு சந்திப்பாக போராளிகள் குழு அருண் நேருவை சந்தித்தது. அப்பொழுது அருண் நேரு உள்நாட்டு விவகார இராஜாங்க அமைச்சராக இருந்தவர். அவர் பிரபாகரனிடம் கூறுகையில் "நாட்டின் இரத்த களறிகளுக்கு முடிவு கட்ட வேண்டும் என்பதை இந்தியா விரும்புவதாக" கூறினார்.

அருண் நேரு பேசுவதை எல்லோரும் அமைதியாக எந்தவிதமான சிறிய ஓசை கூட எழுப்பாமல் கேட்டுக்கொண்டு இருந்தார்கள். நேரு மிகைப்படுத்தி பேசி இருந்தால் அது தவறாக இருக்கும். ஆனால் அவர்கள் நிலைமையை பற்றித்தான் குறிப்பிட்டார்.

நேருவுடனான பேச்சு முடிந்த பிற்பாடு, பிரபாகரன் மற்ற போராளி குழுக்களின் வாகனத்தில் ஏறிச் சென்றார். நேரு சொன்னதை புரிந்து கொள்ள தவறிவிட்டேனோ என்பதை அறிவதற்கு அவர்களுடன் பயணமானார். வழமையில் இப்படித்தான் சந்தேகங்களை தீர்ப்பதற்காக போராளிக் குழுக்களின் பிரதிநிதிகளுடன் செல்வது வழமை.



ஏனெனில், புதுடெல்லியில் நடைபெறும் கூட்டங்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் தான் நடைபெறும். எனவே அதை அவரால் புரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. பிரபாகரன் ஆங்கிலத்தை கற்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவர் பாலசிங்கத்தின் மனைவியான அடேல்லிடம் ஆங்கிலத்தைப் படித்து வந்தார். சிறிது சிறிதாக அவருடைய ஆங்கில அறிவு முன்னேற தொடங்கி இருந்த போதும் அவரால் ஆங்கிலத்தை பூரணமாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

திம்புவில் முதல் கட்ட பேச்சுவார்த்தை ஒரு முடிவுக்கு வராத நிலையில் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது. இவ்வாறு இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகிய போது இலங்கையில் மீண்டும் போர் மேகங்கள் சூழத் தொடங்கின.

இராணுவத்தினரும், சிங்களக் குண்டர்களும் பொதுமக்களை தாக்கி கொலை செய்தார்கள் என்ற செய்தி திம்புப் பேச்சுவார்த்தை நடைபெறுகின்ற பொழுது வந்து சேர்ந்தது.

அந்தச் செய்தியைக் கேட்ட பொழுது இலங்கை அரசாங்க தூதுக்குழுவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த போராளி குழுக்கள் பேச்சுவார்த்தையை பகிஷ்கரித்து வெளியேறின. போராளிக் குழுக்கள் வெளியேறுகின்ற பொழுது இலங்கை அரசாங்கம் "கொஞ்சம் பொறுங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டார்கள்.

அதையடுத்து திம்புவில் நடைபெற்ற பேச்சு முடிவுக்கு வந்தது. இந்திய அரசாங்கம் எவ்வளவு முயன்றும் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க முடியாமல் போய் விட்டது.

அதையடுத்து புளொட், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ ஆகிய 4 போராட்ட குழுக்கள் திம்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த அவர்களின் தூதுக் குழவின் ஒவ்வொரு நபரை வெளியே எடுத்தார்கள்.

அதே நேரத்தில் தமிழர் விடுதலை புலிகளின் சார்பில் பங்கு பற்றிய 2 பிரதிநிதிகளையும் உடனே நாடு திரும்புமாறு பிரபாகரன் அறிவித்தல் விட்டார்.

தமிழ் போராளிகள் குழுக்கள் ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் பேச்சு நடத்திக்கொண்டு இருக்கும் அதேநேரம் பொதுமக்கள் தாக்கப்படுவது ஏற்புடையது அல்ல என்று பிரபாகரன் கூறி கொந்தளித்தார்.


இந்த பிரச்சனைக்கு பதிலடி கொடுக்கும் விதமாக திருகோணமலையில், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இராணுவத்தின் ஜீப் ஒன்றை குண்டு வைத்து தகர்த்தார்கள். அதில் 4 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டார்கள்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் பாலசிங்கம் கொழும்பு, பேச்சுவார்த்தை காலத்தில் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கவில்லை என்று குற்றம் சுமத்தினார்.


(தொடரும் ...)

# அடக்க வந்தவரின் உயிரை அடக்கிய காளை

ஸ்பெயின் நாட்டின் பாரம்பரிய விளையாட்டுகளில் காளை அடக்கும் போட்டி பிரபலமானது. மிகப் பெரியதொரு மைதானத்தில் பண்டைய உடை அணிந்த ஒருவர் சீறிவரும் காளைக்கு முன்னால் சிவப்புத்துணியைக் காட்டி அம்புகளால் குத்தி காளையைக்கொல்வார். ஆயிரக்கணக்கான ரசிகர்கள் மைதானத்தைச் சுற்றி இருந்து ஆரவாரம் செய்வார்கள். கடந்த வாரம் நடைபெற்ற காளை அடக்கும் போட்டியில் விக்ரர் பாரியோ என்ற 29 வயதான இளம் வீரர் பரிதாபமாக உயிரிழந்தார். 21 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற மிக மோசமான உயிர்ப்பலி இதுவாகும்.







ஸ்பெயின் நாட்டின் தெரிதல் எனும் நகரில் நடைபெற்ற காளை அடக்கும் போட்டியைக் காண வழக்கம் போல் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் குழுமி இருந்தனர். பாரியோவின் வீரத்தைக் காண்பதற்காக அவரது காதல் மனைவி ரிகுயில் செனாவும் பார்வையாளர் பகுதியில் இருந்தார். சீறிவந்த காளையில் முதுகில் பாரியோ சில அம்புகளைச் செலுத்தினார். ரசிகர்கள் ஆரவாரம் செய்து பாரியோவை உற்சாகப்படுத்தினர்.

செகோவியா நகரில் பிறந்தவர் பாரியோ. மாட்ரிட் அருகே இந்த நகரம் உள்ளது. கோல்ப் கிளப் ஒன்றில் இவர் பணியாற்றி வந்தார். நீண்ட காலமாகவே காளை பிடி வீரராக வேண்டும் என்ற ஆர்வத்தில் அதற்காக பயிற்சி பெற்று வீரராக மாறினார். 2012ம் ஆண்டு முதல் இவர் முழுமையான காளைச்சண்டை வீரராக மாறி காளைகளை அடக்கி வந்தார். ஸ்பெயின் நாட்டின் தெரியல் என்ற நகரில்தான் இந்த காளைச் சண்டைப் போட்டி நடந்தது. வருடா வருடம் நடக்கும் பெரியா டெல் ஏஞ்செல் என்ற திருவிழாவின் ஒரு பகுதியாக காளைச் சண்டைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாரியோவின் வெற்றியை எதிர்பார்த்திருந்த வேளையில் திடீரெனத் திரும்பிய காளை பாரியோவின் நெஞ்சைக் குத்திக் கிழித்து அவரைத் தூக்கி எறிந்தது. பார்வையாளர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். விரைந்து சென்ற பாதுகாவலர்கள் பாரியோவை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பினர். கணவனின் வீரத்தைக் காணவந்த செனா அவரின் மரண ஓலத்தைக் கேட்டுத் துடித்தார். கணவனின் வெற்றியைக் கண்டு ரசிக்க விரும்பிய செனா அவரின் மரணத்தைக் கண்டு கலங்கினார்.

காளை அடக்கும்போட்டியில் ஏற்கெனவே பல வீரர்கள் மடிந்தனர். காளை கட்டுமீறி பார்வையாளர் பகுதிக்குள் புகுந்ததனால் பார்வையாளர்கள் பலர் இறந்தனர். 1984 ஆம் ஆண்டு நடந்த போட்டிகளின்போது 5 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் பிரபலமான காளை பிடி வீரர் பிரான்சிஸ்கோ ரிவேராவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1985 ஆம் ஆண்டு ஜோஸ் ஜியோ என்ற வீரர் மரணமானார். பிரபல்மான வீரரான மனோலா மொண்டிலுயு, ரமொன் சொரொ ஆகிய இருவரும் 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியின் போது கொல்லப்பட்டனர்.

இந்தியாவில் நடைபெறும் ஜல்லிக்கட்டுக்கும் ஸ்பெயினில் நடைபெறும் காளை அடக்கும் போட்டிக்குமிடையே நிறைய வேறுபாடுகள் உள்ளன. ஜல்லிக் கட்டின் போது காளைக்கு எதுவித துன்பமும் நேர்வதில்லை. ஆனால், ஸ்பெயினில் நடைபெறும் காளை அடக்கும் போட்டியின் போது அம்புகளால் குத்தப்பட்டு குற்றுயிரும் குலை உயிருமாக காளை அடக்கப்படுகிறது. இந்தியாவில் ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்கபட்டுள்ளது. இந்தியாவைக் குறிவைக்கும் பீட்டா போன்ற


# நீடிக்கும் மர்மம்!

# நேர்கோட்டில் அமைந்திருக்கும் சிவாலயங்கள்

சிலர் இதை அறிந்திருக்கலாம். சிலர் இதை அறியாமல் இருக்கலாம். ஆனால், இது அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய ஓர் அறிவியல் கலந்து ஆன்மீக விஷயமாகும். எந்தவொரு அறிவியல் நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்ப கருவிகளும் இல்லாத பண்டைய காலத்திலேயே சிவனின் பஞ்ச பூத ஸ்தலங்கள் என கூறப்படும் ஐந்து கோவில்களும், இந்தியாவில் கேதார்நாத்திலிருந்து, இராமேஸ்வரம் வரை ஒரே நேர் கோட்டில் கட்டப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் உள்ள பிரபலமான சில சிவன் கோவில்கள்!!! மிக கச்சிதமாக ஒரே நேர்கோட்டில் அமைந்திருக்கும் இதை எளிதாக எதிர்பாராமல் நடந்த விஷயமாக கருத முடியாது. கேதார்நாத்திலிருந்து, இராமேஸ்வரம் வரை நேர்கோட்டில் கோவில்களை எப்படி அந்தக் காலத்தில் கட்டினார்கள் என்பது இன்றளவும் நீடிக்கும் மர்மமாகவே இருந்து வருகிறது.

பஞ்சபூத ஸ்தலங்கள் : நிலம் - காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில், நெருப்பு - திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில், நீர் - திருவானைக்கா ஜம்புகேசுவரர் கோயில், ஆகாயம் - சிதம்பரம் நடராசர் கோயில், காற்று - திருக்காளத்தி காளத்தீசுவரர் கோயில்.

சிவனின் இந்த பஞ்சபூத ஸ்தலங்களும் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த கோவில்கள் ஆகும். அப்போது, எந்தவொரு தானியங்கி அல்லது செயற்கைக் கோள் உதவிகளும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.




இந்த பஞ்சபூத ஸ்தலங்கள் மட்டுமின்றி இமாலயத்தில் இருக்கும் கேதார்நாத்தும் கூட இதே நேர்கோட்டிலான தீர்க்கரேகையில் (longitude) அமைந்திருப்பது வியப்பின் உச்சத்திற்கு கொண்டு செல்கிறது


கேதார்நாத்திலிருந்து இராமேஸ்வரம் வரை இடைப்பட்ட தொலைவு ஏறத்தாழ 2383 கிலோமீட்டர்கள் ஆகும். இவ்வளவு இடைப்பட்ட தூரத்தில் இடையிடையே அமைந்திருக்கும் இந்த சிவாலயங்கள் ஒரே தீர்க்கரேகையில் அமைந்திருப்பது மர்மம் விலகாமலேயே நீடித்து வருகிறது.

1) கேதார்நாத் - கேதார்நாத் கோயில் (30.7352 டே, 79.0669)
2) காலேஷ்வரம் - காலேஷ்வரா முக்தீஷ்வரா சுவாமி கோயில் (18.8110, 79.9067)
3) ஸ்ரீகாளஹஸ்தி - ஸ்ரீகாளஹஸ்தி கோயில் (13.749802, 79.698410)
4) காஞ்சிபுரம் - ஏகாம்பரநாதர் கோயில் (12.847604, 79.699798
5) திருவானைக்காவல் - ஜம்புகேஸ்வரர் கோயில் (10.853383, 78.705455)
6) திருவண்ணாமலை - அண்ணாமலையார் கோயில் (12.231942, 79.067694)
7) சிதம்பரம் - நடராஜர் கோவிலில் (11.399596, 79.693559) 8) இராமேஸ்வரம் - ராமநாத கோயில் (9.2881, 79.3174




கேதார்நாத் முதல் காலேஷ்வரம் வரை இடையே இன்னும் பல சிவாலயங்கள் இதே நேர்கோட்டில் தீர்க்க ரேகையில் அமைந்திருக்கலாம் எனவும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.





# சிறுவர் பக்கம்

## நீர் அருந்தாத உயிரினம்

'மணலுள் முழுகி மறைந்து கிடக்கும் நுணலும்தன் வாயால் கெடும்.'

இது பழமொழி நானூறில் இடம் பெற்றுள்ள கடைசி இரு வரிகள். நுணல் என்பது தவளையைக் குறிக்கும். தவளை வயல் வரப்புகளில் மறைந்து வாழ்ந்தாலும் சும்மா இருக்காது. அவ்வப்போது தன் கரகர குரலால் சத்தம் எழுப்பியபடி இருக்கும். இதனால் தவளையின் இருப்பிடத்தை அறியும் பாம்பு போன்ற உயிரிகள் தவளையை இனம் கண்டு தின்றுவிடுகின்றன.



தவளைக்கு சமஸ்கிருத மொழியில் 'மண்டூகம்' என்று பெயர். ஆங்கிலத்தில் Frog. இது frogga என்ற பழைய ஆங்கில வார்த்தையில் இருந்து வந்தது. அனுரா (Anura) குடும்பத்தைச் சேர்ந்தது. நீர், நிலம் இரண்டிலும் வசிப்பதால் இது இருவாழ்வியல் உயிரி (Amphibian -ஆம்பிபியன்) என்று அழைக்கப்படுகிறது.

இது சுவாசிப்பதும் இரண்டு விதங்களில் தான். நிலத்தில் இருக்கும்போது நுரையீரல் வழியாக சுவாசிக்கிறது. நீருக்கடியில் இருக்கும்போது செவுள்கள் (Gills) வழியாக சுவாசிக்கிறது.

ஒரே நேரத்தில் மேல் நோக்கியும், பக்க வாட்டிலும், முன்னோக்கியும் பார்க்கக் கூடியது தவளை. இன்னொரு ஆச்சரியமும் உண்டு. உறங்கும் பொழுதுகூட தவளை கண்களை மூடாது. காரணம், அதற்கு இமைகளே கிடையாது.

தொண்டைக் குழிக்குள் உணவை உட்தள்ளுவதற்கும் இதன் கண்கள் உதவுகின்றன. பசைத்தன்மை உள்ள நாக்கினால் பூச்சிகளைப் பிடித்து உண்ணும். நீரிலேயே வாழ்ந்தாலும் தவளை தண்ணீர் குடிப்பதில்லை. தோலின் நுண் துளைகள் வழியாக தேவையான நீரை எடுத்துக்கொள்கிறது.



## வாரமொரு குறள்

*குறள் 38*

*வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்*

*வாழ்நாள் வழியடைக்கும் கல்.*

**பொருள்**

பயனற்றதாக ஒருநாள்கூடக் கழிந்து போகாமல், தொடர்ந்து நற்செயல்களில் ஈடுபடுபவருக்கு வாழ்க்கைப் பாதையைச் சீராக்கி அமைத்துத் தரும் கல்லாக அந்த நற்செயல்களே விளங்கும்.

## மஞ்சள் நிறமே




பாடசாலை வாகனங்களை அன்றாடம் பார்க்கிறோம். மஞ்சள் நிறத்தை ஏன் பாடசாலை வாகனங்களுக்குத் தேர்ந்தெடுத்தார்கள்? மஞ்சள் நிறம் மற்ற நிறங்களைவிட அதிவேகமாக நம் கவனத்தை ஈர்க்கக்கூடியது. சிவப்பைவிட மஞ்சள், 1.24 மடங்கு விரைவாக நம் புறப்பார்வையை ('பெரிபெரல் விஷன்' - Peripheral Vision) ஈர்க்கிறது. அது மட்டுமல்ல, காலை, மாலை வேளைகளில் மஞ்சள் வண்ணமே பளிச்சென்று தெரியும்.

கொலம்பியா பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் ஃப்ராங்க் (Dr. Frank W. Cyr) என்பவர் பாடசாலை வாகனங்களுக்கு மஞ்சள் நிறம் அளிக்கலாம் என ஆலோசனை தெரிவித்தார். பாடசாலை வாகனங்களின் அமைப்பு, நிறம் எப்படி இருக்கலாம் என முடிவு செய்வதற்காக 1939 இல் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் பாடசாலை வாகனங்களுக்கு மஞ்சள் வண்ணமே பொருத்தமானது என முடிவு செய்யப்பட்டது. டாக்டர் ஃபிராங்க் 'மஞ்சள் நிறப் பாடசாலை வாகனங்களின் தந்தை' (ஃபாதர் ஆஃப் யெல்லோ ஸ்கூல் பஸ் - Father of Yellow School Bus) என அழைக்கப்படுகிறார்.

உலகின் பெரும்பான்மையான நாடுகள் பாடசாலை மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான வாகனங்களுக்கு மஞ்சள் நிறத்தையே பயன்படுத்துகின்றன.

## ஆறு வித்தியாசங்கள்



ஆறு வித்தியாசங்களை கண்டு பிடித்து

தினச்செய்தி
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.

எனும் முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.



# குறுக்கெழுத்துப் போட்டி - 11

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ☒ | 3 | 4 |
| 5 | | ☒ | 6 | ☒ | |
| | ☒ | 7 | | 8 | |
| 9 | 10 | | ☒ | | ☒ |
| ☒ | 11 | | 12 | | ☒ |
| 13 | | ☒ | 14 | | |

**இடமிருந்து வலம்**

1. மழைக்காலத்தில் கத்துவது.
3. நாங்கள்.
5. பல் விளக்க உதவுவது.
7. காலில் அணிவது (குழம்பியுள்ளது)
9. இந்த நோய் வந்தால் நடக்க முடியாது. (குழம்பியுள்ளது)
11. இரைச்சல் (குழம்பியுள்ளது)
13. இது மிரண்டால் காடு கொள்ளாது.

**மேலிருந்து கீழ்**

1. கூரைக்குப் பயன்டுவது.
2. அரசாங்கத்திற்கு செலுத்துவது.
4. நீர் (குழம்பியுள்ளது).
6. தலைமுடி.
7. நூறு.
8. விலையுயர்ந்த உலோகம் (குழம்பியுள்ளது).
10. கோழியைப் போன்று இதையும் வளர்ப்பார்கள்.
12. இது பிடித்தால் ஏழரை வருடங்கள் கஷ்டமாம்.

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் ஜுலை 28 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 30.07.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப்போட்டி - 9 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1. நரபலி
5. கதிரை
6. வளி
7. பதி
9. சம்பா
10. தாரம்
11. பசி
12. வினை

**மேலிருந்து கீழ்**

1. நகம்
2. ரதி
3. பரம்பரை
4. கிளிநொச்சி
8. பாதி
9. ஒபாமா
11. பனை

### சரியான விடையை எழுதியவர்கள்

1. எல். கிருஷ்ணன், காலி வீதி, கொழும்பு.
2. சோ. சவீதா, பலாலி வீதி, தின்னவேலி.
3. செ. மதுஷா, மீசாலை தெற்கு, மீசாலை.
4. எல். ஜோசப், மன்னார் வீதி, பேசாலை.
5. சி. ராகினி, ஏகாம்பரம் வீதி, திருகோணமலை.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 11**
**தினச்செய்தி வாரமலர்,**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**



# சிம்புவுடன் ஸ்ரேயா!

ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் சிம்பு நடிக்கும் படம் 'அன்பானவன் அசராதவன் அடங்காதவன்'. இப்படத்தில் சிம்பு வுக்கு ஜோடியாக ஸ்ரேயா சரண் நடிக்க ஒப்புக் கொண்டுள்ள தாக தகவல் வெளியாகியுள் ளது. சிம்புவும், ஸ்ரேயாவும் இணைந்து நடிக்கும் முதல் படம் என்பது குறிப்பிடத்தக் கது. சமீபத்தில் கார்த்தி நடிப்பில் வெளியான 'தோழா' படத் தில் ஸ்ரேயா ஒரு கெஸ்ட் ரோலில் நடித்திருந்தார். அந்த படத்தை தொடர்ந்து ஆதிக் ரவிச்சந்திரன் இயக்க்கும் 'அன்பானவன் அசராதவன் அடங்காதவன்' படத்தில் சிம்புவுடன் நடிக்க ஒப்புக் கொண்டுள்ளார் ஸ்ரேயா. இப்படத்தின் படப் பிடிப்பு விரைவில் ஆர்மபமாக வுள்ளது. சென்னை, மைசூர் கேரளா ஆகிய இடங்களில் இப்படத்தின் பெரும்பாலான காட்சிகளின் படப்பிடிப்பு நடை பெற வுள்ளதாம். யுவன்சங்கர் ராஜா இசை அமைக்கும் இப் படத்திற்கான இரண்டு பாடல் கள் ரெடியாகிவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளாது.



# ஷாருக்கின் வருத்தம்

என் குழந்தைகளை மீடியாவிடம் இருந்து மட்டும் அல்ல, என்னிடம் இருந்தே தள்ளிவைக்க விரும்பு கிறேன். முதலில் என் மகனைப் பற்றிய செய்திகள் ஒன்லைனில் பரவின. இப்போது என் 16 வயது மகள் தன் தம்பியுடன் பீச்சில் இருப் பதை, ஷாருக்கான் மகள், பிகினி உடையில் என அருவருப்பான கமென்ட்டுகளுடன் ஒன்லைனில் பரப்புகிறார்கள். சாதாரண ஒரு விஷயத்தைக்கூட ஏதோ மிகப் பெரிய தவறு செய்துவிட்டதுபோல அவர்களை நினைக்க வைக்கிறார்கள். எனக்கு என் குழந்தைகளின் எதிர்காலம் குறித்து பயமாக இருக்கிறது" என வருத்தப்பட்டிருக்கிறார் ஷாரூக்.

விஜய் தொலைக்காட்சி
தொகுத்து வழங்கும் ே
மல் கற்பனை செய்து ப
ட்டுத்தான் மீடியாவுக்கு
ஒரு கேள்வியை பலரிட
தொகுத்துக் கூறும் திற
உரியது. கோட் இல்லா
முடியாதா எனக் கேட்ட
என்னன்னா, என் கல்ய
கோட் போடாதவன் நா
டை கட்டவும் தெரியாது.
வில் முதுகுப் பக்கத்துல
ரிசீவர் மாட்டியிருப்பேன்
இல்லாம அதை மட்டும்
யிருந்தா, ஒருமாதிரி உ
தும். அதான் கோட். மத்
படி என்னை வெளியே
எங்கேயும் கோட் போட்
டுப் பார்க்க முடியாது!"
என்கிறார்.

# இலியானாவுக்கு 50 இலட்சம் ஹிட்ஸ்

1959 ஆம் ஆண்டு நடந்த நானாவதி கொலை வழக்கு, இந்தியா முழுவதும் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட வழக்கு. கடற்படை கமாண்டர் நானாவதியின் மனைவி அஹூஜா, பிரேம் என்பவரைக் காதலித்தார். இதைக் கண்டுபிடித்த நானாவதி, பிரேமைச் சுட்டுக்கொன்றுவிட, அவருக்கு ஆயுள் தண்டனை விதித்தது நீதிமன்றம். ஆனால், இரண்டே ஆண்டுகளில் நானாவதி விடுதலையானார். மிகவும் பரபரப்பைக் கிளப்பிய இந்த வழக்கைத்தான் ஹருஸ்டம் என படமாக்கி இருக்கிறார்கள். அக்ஷய் குமாரின் ஹருஸ்டம் படத்தின் ஹீரோயின் இலியானாதான். கடந்த வாரம் வெளியான இந்தப் படத்தின் ட்ரெய்லர், இதுவரை 50 லட்சம் ஹிட்ஸ்களை அள்ளி இருக்கிறது.



# மீண் ... தமிழுக்கு ... நந்தித...

அழகி, நீர்ப்பறவை, கன்னத்தில் முத்தமிட்டால் என
தமிழ் படங்களில் மட்டுமே நடித்திருக்கிறார் நந்தித
புதிய படங்களில் நடிக்க வாய்ப்பு வந்தபோதும் ே
பிடிக்காததால் நடிக்க மறுத்துவிட்டார். தற்போது இ
பொருத்தமான கதாபாத்திரங்கள் கிடைக்காததால் இ
பொறுப்பை ஏற்றுள்ளார். ஏற்கனவே அரசியல் பி
யுடன் கூடிய 'பைராக்' என்ற படத்தை இயக்கி உள்
படம் இயக்குவதற்கான ஸ்கிரிப்ட் தயாரித்து வருகிற
இடைவெளிக்கு பிறகு மீண்டும் தமிழில் நடி
ஒப்புக்கொண்டிருக்கிறார் நந்திதா தாஸ். பாடலா
குட்டி ரேவதி இயக்கும் படத்தில் நடிக்க உள்ள
இப்படத்தில் சமுத்திரக்கனி ஹீரோ. குடும்ப
பெண்கள் மீது பாயும் வன்முறைகளை
எடுத்து சொல்லும் கதையாக இது
உருவாக உள்ளது.



# அஜித்துடன் நடிக்க விரும்பும் பவன்கல்யாண்

கோலிவுட் மட்டுமின்றி தென்னிந்தியாவின் சிறிய நடிகர்கள் முதல் பெரிய நடிகர்கள் வரை தல அஜித்துடன் நடிக்க வேண்டும் என்ற தங்கள் ஆசையை பலமுறை வெளிப்படுத்தியுள்ள நிலையில் தெலுங்கில் முன்னணி நடிகராக விளங்கி வரும் பவன்கல்யாண் அவர்களும் இதே கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். மல்டி ஸ்டார் படம் ஒன்றில் அஜித்துடன் நடிக்க வாய்ப்பு கிடைத்தால் நடிப்பீர்களா? என்ற ரசிகர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த பவன்கல்யாண், அப்படி ஒரு வாய்ப்பு கிடைத்தால் நிச்சயம் தல அஜித்துடன் நடிப்பேன் என்று கூறியுள்ளார்.

# கோட் இல்லாத கோபிநாத்



தொலைக்காட்சியில் நீயா நானா நிகழ்ச்சியைத்
து வழங்கும் கோபிநாத்தை கோட் இல்லா
பனை செய்து பார்க்க முடியாது. விருப்பப்
ான் மீடியாவுக்கு வந்ததாகச் சொல்கிறார்.
ள்வியை பலரிடம் கேட்டுவிட்டு அவற்றைத்
துக் கூறும் திறமை அவருக்கு மட்டுமே
. கோட் இல்லாமல் உங்களைப் பார்க்க
ா எனக் கேட்டபோது, "உண்மை
ன்னா, என் கல்யாணத்துக்குகூட
போடாதவன் நான். சரியா
டவும் தெரியாது. ஷோ
துகுப் பக்கத்துல மைக்
மாட்டியிருப்பேன். கோட்
அதை மட்டும் மாட்டி
, ஒருமாதிரி உறுத்
தான் கோட். மத்த
னை வெளியே
ும் கோட் போட்
க்க முடியாது!"
ர்.

# மீண்டும் ழுக்கு வரும் ந்திதாதாஸ்



த்தமிட்டால் என ஒரு சில
ருக்கிறார் நந்திதா தாஸ்.
வந்தபோதும் வேடங்கள்
ர். தற்போது இந்தியிலும்
டைக்காததால் இயக்குனர்
வே அரசியல் பின்னணி
த இயக்கி உள்ளார். புதிய
பாரித்து வருகிறார். நீண்ட
டும் தமிழில் நடிக்க
ா தாஸ். பாடலாசிரியர்
ல் நடிக்க உள்ளார்.
ஹீரோ. குடும்ப
ன்முறைகளை
தையாக இது
ளது.

# வெளியேறினார் சமந்தா



வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் 'வடசென்னை' படத்தில் ஹீரோயினாக ஒப்பந்தமானார் சமந்தா. இதற்கிடையே அவர் நாக சைதன்யாவை கரம் பிடிக்க உள்ளதால் இந்த படத்திலி ருந்து வெளியேற முடிவு செய்திருப்பதாக கடந்த சில வாரங்களாக தகவல் வெளி யானது. அது உண்மையாகி விட்டது. இது குறித்து விசாரித்த போது, 'வட சென்னை படத்தில் சமந்தா நடிக்கவில்லை. இப்படத்தில் நடிக்க அவர் ஒப்புக்கொண்டபோது தமிழில் மட்டும் தான் எடுப்பதாக இருந்தது. இப்போது 3 மொழியில் படம் உருவாகவுள்ளது. அதற்கு 2 வருட கோல்ஷீட் தேவைப்படுகிறது. அவ்வளவு நீண்ட நாட்களுக்கு சமந்தாவால் கோல்ஷீட் ஒதுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அவர் வெளியேற முடிவு செய்தார்' என்றனர். 'நாக சைதன்யாவை மணக்க உள்ளதையொட்டி படத்திலிருந்து வெளியேறினாரா?' என்றதற்கு,

'அதற்கும் படத்திலிருந்து வெளியேறியதற்கும் சம்பந்தம் இல்லை. திருமணம்பற்றி உறுதியான தகவல் எதுவும் இல்லை. கோல்ஷீட் தேதி பிரச்சினை காரணமாகவே அவர் நடிக்கவில்லை' என்கிறது படதரப்பு. தற்போது சமந்தாவுக்கு பதிலாக அமலா பால் உள்ளிட்ட சில நடிகைகளிடம் நடிக்க பேச்சு நடந்து வருகிறது.






# தினமும் எண்ணெய் குளியல் அவசியமா?

தினமும் கூந்தலுக்கு எண்ணெய் தடவ வேண்டுமா? எண்ணெய் தடவினால்தான் முடி வளருமா? எந்த எண்ணெய் நல்ல எண்ணெய்? எண்ணெய் குளியல் அவசியம் தானா? இப்படி எண்ணெய் தொடர் பாக ஏராளம் சந்தேகங்கள் உண்டு எல்லோருக்கும். எது சரி, எது தவறு என்கிற தெளிவின்றி, தினம் ஒரு எண்ணெயைப் பயன்படுத்துவது, எண்ணெயே இல்லாமல் விடுவது என எல்லாவற்றையும் முயற்சி செய்து பார்க்கிறவர்களே பெரும்பான்மை. தினமும் தலைக்கு எண்ணெய் வைப்பது தேவையற்றது. ஆனால், தினசரி தலைக்குக் குளிக்க வேண்டியது கட்டாயம். இன்றைக்கு சுற்றுப்புறச் சூழல் அளவுக்கதிகமாக மாசடைந்துள்ள காரணத்தினால், தினமும் தலைக்குக் குளிப்பதன் மூலம்தான் அந்த மாசிலிருந்து கூந்தலைப் பாதுகாத்து ஆரோக்கியமாக வைக்க முடியும். தினம் தலைக்குக் குளித்தால் கூந்தல் வறண்டு விடுமே என நினைப்பவர்கள், இரவு தூங்கச் செல்வதற்கு முன் தேங்காய் எண்ணெய் மற்றும் ஆலிவ் எண்ணெய் இரண்டையும் சம அளவு கலந்து தலையில் தடவி, மறுநாள் காலையில் அலசி விடலாம்.

ஐந்தெண்ணெய் கலவையும் மிகவும் அற்புதமானது. நல்லெண்ணெய், கடுகெண்ணெய், விளக்கெண்ணெய், ஒலிவ் எண்ணெய் மற்றும் பாதாம் எண்ணெய் ஆகிய ஐந்தையும் சம அளவு எடுத்து ஒன்றாகக் கலந்து கொள்ளவும். இந்த எண்ணெயை முதல் நாள் இரவு தலையில் தடவிக் கொண்டு, காலையில் கூந்தலை அலசலாம். கூந்தல் ஆரோக்கியத்துக்கு இது மிகச் சிறந்த எண்ணெய். காதி கடைகளில் குளிர்தாமரை தைலம் எனக் கிடைக்கும். அது 30 மி.லி. அளவு எடுத்து அதில் 10 மி.லி. விளக்கெண்ணெயும், 10 மி.லி. நல்லெண்ணெயும் கலந்து வார இறுதி நாட்களில் தலையிலும், உடலிலும் தடவி ஊறிக் குளிக்கலாம்.

இது உடல் சூட்டைத் தணிக்கக் கூடியது. வார இறுதி நாட்களில் நிதானமான எண்ணெய் குளியல் எடுப்பது மிகவும் அவசியமானது. அப்படி எடுக்கும்போது அந்த எண்ணெய் கலவையில் ஒரு வாரம் விளக்கெண்ணெய், இன்னொரு வாரம் கடுகெண்ணெய், பிறகு ஐந்தெண்ணெய் இப்படி இருக்கும்படி மாற்றிக் கொள்ளலாம். பொதுவாக விளக்கெண்ணெய் உபயோகிப்பவர்களது கூந்தல் அதிகம் உதிராமலும் நரைக்காமலும் இருக்கும்.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பது என்றால் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் பயன்படுத்துவார்கள். தேங்காய் எண்ணெய்க்கு பொடுகை வளர்க்கக் கூடிய தன்மை உண்டு. அதன் அந்த குணத்தைக் குறைக்க அத்துடன் சிறிது கடுகெண்ணெயோ, நல்லெண்ணெயோ, ஒலிவ் எண்ணெயோ சேர்த்துக் கொள்ளலாம்.

**எண்ணெய்க்கும் முடி வளர்ச்சிக்கும் தொடர்புண்டா?**

இந்தக் கேள்விக்கு இல்லை என்பது தான் நிச்சயமான பதில். எந்த எண்ணெயையாவது பயன்படுத்தினால் முழங்கால் வரை முடி வளரும் என யாருமே உத்தரவாதம் தர முடியாது. ஏனென்றால், முடியின் நீளம், அடர்த்தி என எல்லாவற்றையும் நிர்ணயம் செய்வது நம் ஜீன்கள். பாரம்பரியமாக உள்ளதுதான் தொடருமே தவிர, எண்ணெயால் முடியை வளரச் செய்யவே முடியாது. முடி என்பது தானாக வளரக் கூடியது. அது ஏன் வளரவில்லை... ஏன் கொட்டுகிறது என்பதற்கான மூலகாரணத்தைக் கண்டுபிடித்து சரி செய்தாலே எந்த வயதிலும் முடி நன்றாகவே வளரும். எனவே, முடி வளர தைலமோ, எண்ணெயோ எந்த வகையிலும் உதவுவதில்லை.

**எண்ணெய் குளியல் ஏன் அவசியம்?**

அந்தக் காலத்தில் அவசியமான பழக்கமாக இருந்த எண்ணெய் குளியல், முடி வளர்ச்சிக்காக செய்யப்படவில்லை. உடல் சூடு தணிந்து, நரம்புத் தளர்ச்சி மறையவும், மன அழுத்தம் மாயமாகவும்தான் வாரம் ஒரு நாள் எண்ணெய் மசாஜ் செய்து குளிப்பதை வழக்கமாக வைத்திருந்தார்கள். முடி வளரச் செய்ய வாரம் ஒரு முறை குளிப்பது போதாது. நமது சருமத்தில் கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய துவாரங்கள் இருக்கும். அவை சருமத்தின் மேலுள்ள எபிடெர்மிஸ் (Epidermis) லேயரில்தான் இருக்கும். சருமத்தில் எண்ணெயை அரக்கத் தேய்க்கிற போது இந்த துவாரங்கள் வழியே சருமத்தின் உள்ளே இறங்கும். அதன் மூலம் உடல் சூடு குறையும். அசதி மாறும். களைப்பு நீங்கும்.

**சைனஸ் உள்ளவர்கள் எண்ணெய் குளியல் எடுக்கலாமா?**

அரோமா தெரபியில் சைனஸ் உள்ளவர்களுக்கு பிரத்யேகமான ஒயில்கள் உண்டு. பொதுவாக சைனஸ் உள்ளவர்கள் நீர் கோர்த்துக் கொள்ளும் என பயந்து எண்ணெய் குளியலையே தவிர்ப்பார்கள். ஆனால், சைனஸ் உள்ளவர்கள் ஒரு டீஸ்பூன் நல்லெண்ணெய், ஒரு டீஸ்பூன் கடுகு எண்ணெய் எடுத்து, அதில் தலா 3 சொட்டு Tea tree oil, Camphor oil, Black pepper oil கலந்து லேசாக சூடு செய்து, தலையில் தடவி அரை மணி நேரம் கழித்து குளிக்கும் போது சைனஸின் வலி மற்றும் தலை பாரம் குறைவதை உணரலாம். இதைத்தான் அரோமா தெரபியில் Lymphatic drainage treatment என்று சொல்கிறோம்.



கத்திரிக்காய் சட்னி, வெங்காய சட்னி, தக்காளி சட்னி செய்யும்போது சிறிதளவு கறுப்பு உளுந்தை எண்ணெயில் வறுத்து கொஞ்சம் கொரகொரப்பாக அரைத்து, சட்னியுடன் கலந்தால், சுவை அசத்தலாக இருக்கும்.

வெங்காய சாம்பார் செய்யும்போது சிறிதளவு கடலை மாவை கரைத்து ஊற்றி கொதிக்கவைத்தால், ருசியும் மணமும் நன்றாக இருக்கும்.

கலவை சாதம், வெஜிடபிள் பிரியாணி போன்றவை உதிரியாக பொல பொலவென்று வர வேண்டுமானால், குக்கர் மூடியைத் திறந்ததுமே சிறிதளவு எலுமிச்சைச் சாற்றை சேர்த்துக் கிளறிவிட வேண்டும்.

ரசம் செய்யும்போது கைவசம் கொத்தமல்லித்தழை இல்லையா? சிறிது மல்லியை (தனியா) நசுக்கிப் போடலாம். ரசம் வாசனையாக இருக்கும்.

அதிரசம் மிருதுவாகவும், ருசியாகவும் வர வேண்டுமா? அதிரச மாவில் புளிக்காத தயிர் அல்லது பூவன் வாழைப்பழத்தில் பாதியை சேர்த்துப் பிசைந்து செய்யவும்.



# பேலியோ டயட்

Paleo or Cave Man Diet என்று அழைக்கப்படும் இந்த உணவு, மனித இனம் நெருப்பு என்றால் என்னவென்று அறியாத, தானியங்கள் மற்றும் இன்றைய முக்கிய உணவாக நாம் உண்ணும் எதையும் உணவென்று கண்டுபிடிக்காத, மனிதன் குகைகளில் வசித்த காலத்தில் மனிதன் என்ன சாப்பிட்டு உயிர் வாழ்ந்தானோ அந்த உணவைச் சாப்பிடுவது.

காலை உணவு

100 கிராம் பாதாம் அல்லது பிஸ்தா அல்லது வால்நட்ஸ். பாதாம் விலை அதிகம் எனக் கருதுபவர்கள் மூன்று மாதங்களுக்காகவாவது இதை ஒருவேளை உணவாக எடுத்துக்கொள்வது நல்லது. இதிலுள்ள மக்னீசியம் மற்றும் மற்ற வைட்டமின்கள் டயட்டின்போது உடலுக்குத் தேவையான சத்துகளை அளிக்கிறது. பசியைத் தாங்கும் ஒரு உணவாகவும் இருக்கிறது.

இந்த பாதாமை 24 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து அந்தத் தண்ணீரையும் மூன்று நான்கு முறை மாற்றிப் பின்னர் அதை சிறிது நேரம் உலரவைத்து, நெய்யில் தீயாமல் வதக்கி பின்னர் உண்ணவும். அளவு 100 நம்பர்கள் பாதாம் இதன் எடை கூடக் குறைய 100 கிராம் இருக்கும். ஆக, பாதாம் 100 நம்பரா? கிராமா என்று குழம்பவேண்டாம். 100 நம்பர்கள் உண்ண முடிய வில்லை என்றால் வயிறு நிரம்ப உண்ணவும்.

அது 75 நம்பர் பாதா மாக இருந்தாலும் பரவா யில்லை. பாதாம் உண்ணும் முன்னும், உண்ட பின்பும் 2 மணி நேரங்கள் தண்ணீர் தவிர வேறு உணவுகள் உண்ண வேண்டாம். அதன் சத்து களை பாதாம் சேர விடாது என்பதாலேயே இதைச் சொல் கிறோம். பாதாம் பச்சையாக சாப்பிட்டால் அல்லது நல்ல தரமாக இல்லாமல் இருந்தால் வயிற்று வலி / பேதி போன்றவைகள் வரலாம். வேறு பாதாம் வாங்கி முயற்சிக்கலாம்.

மதிய சாப்பாடு

காலிஃபிளவர் வித் காய்கறி. காலிஃபிளவரை மிக சின்ன அரிசி சைஸ் துண்டுகளாக நறுக்கி இட்லி பாத்திரத்தில் கொதிக்க வைத்து அரிசி போல் பாவித்து பருப்பில்லாத குழம்பில் ஊற்றி உண்ணவும் அல்லது காய்கறி சூப் ஏராளமாக பருகவும். உடன் சிறிது தேங்காய். வாரம் ஒரு நாள் 40 கிராம் கைக்குத்தல் / குதிரைவாலி அரிசி எடுத்து சமைத்து உண்ணலாம். அதற்கு மேல் வேண்டாம்.

ஒவ்வொருமுறை காய்கறி உணவாக எடுக்கும்பொழுதும் 30-40 கிராம் வெண்ணெய் அதனுடன் சேர்த்து உண்ண வும். கொழுப்பு என்பது ஒவ்வொரு உணவிற்கும் தேவை என்பதாலேயே இது சொல்லப்படுகிறது. சைவர்களுக்கு கொழுப்பு உணவு மூலம் கிடைக்கும் வழிகள் குறைவு என்பதால் மேற்சொன்ன விஷயங்களை கவனமாகப் பின்பற்றவும். நைட் டின்னர் : பனீர் டிக்கா. 200 கிராம் பனீரை நெய்யில் வதக்கி டிக்கா அல்லது உங்கள் விருப்பம் போல வீட்டில் தயாரித்த மசாலா கொண்டு சமைத்து உண்ணவும்.

ஸ்னாக்ஸ் : ஒரு கப் முழு கொழுப்பு உள்ள பால்/தயிர். தினம் 100 கிராம் கீரை (எல்லா வகைக் கீரைகளும் உண்ணலாம்) சேர்த்துக் கொள்ளவும். சமையல் எண்ணெய் நெய்/பட்டர்/செக்கில் ஆட்டிய தேங்காய் எண்ணெய்/செக்கில் ஆட்டிய நல்லெண்ணெய் / வசதி இருந்தால் ஒலிவ் ஒயில் மட்டுமே. எண்ணெயை கொதிக்க வைக்கக் கூடாது, உயர் வெப்பத்தில் காய்ச்சக் கூடாது, எந்த உணவையும் பொரித்து உண்ணக்கூடாது.

இனிப்பு எந்த வடிவிலும் (தேன், கருப்பட்டி, சுகர்ஃப்ரீ, வெள்ளை சர்க்கரை, நாட்டு சர்க்கரை, வெல்லம், ஸ்டீவியா, இன்னபிற கூடாது.) முட்டை சேர்த்த சைவ டயட் உங்கள் விருப்பமாக இருந்தால் மேலே சொன்னவற்றில் ஒரு உணவாக 4-5 முட்டைகள் சேர்த்துக்கொள்ளவும்.

## போட்டிச் சிறுகதை 10



பெயர் : தம்பிராசா பரமலிங்கம்
முகவரி : 17/22A நாவலடி ஒழுங்கை வண் - மேற்கு, யாழ்ப்பாணம்
சிறுகதை : விடுவிப்பு



# விடுவிப்பு

நாவலர் வீதியால், பெருமாள் கோவிலடி ரயில் பாதைக் கடவைக்கு அண்மையில் சைக்கிளில் பிரயாணித்துக் கொண்டிருந்தேன். என்னைக் கடந்து சென்ற சைக்கிள் இளைஞன் ‘வெட்டிரும்பு ..... வெட்டிரும்பு.....” என்று குரல் வைத்தான்.

குரல் வந்த திசையில் பார்வையை செலுத் தினேன். வாட்ட சாட்டமான நெடுத்த உடம்பு.சாரம் உடுத்து மடித்துச் சண்டிக்கட்டு கட்டி இருந்தான். அரைக் கை வெள்ளை பெனியன் இரண்டுமே பழுப்பேறிக் காணப்பட்டன.

‘ஓமடா..... ஓமடா.... நீங்க தானேடா ஆண்டவரைக் காட்டிக் குடுத்த ஆக்கள்...”

அவ்வுருவம் கூறிவிட்டு வீதியோரமாக நின்ற மின் கம்பங்களை ஒவ்வொன்றாக சுற்றிச் சுற்றி வளைய வந்து நகர்ந்து கொண்டிருந்தது.

இதற்கு முன்பாகவும் இவ்விதம் மின் கம்பங்களை சுற்றிச் சுற்றி வலம் வந்த படியே வீதிகளில் செல்லும் அந்த உருவத்தைக் கண்டிருக்கிறேன்.

ரயில் பாதை கடவைக்கும், தார் வீதிக்கும் வடக்கு புற முடிவில் வடிகால் அமைப்பில் சீமெந்து வார்ப்புப் பள்ளம் ஒன்றும் காணப்படுகிறது.

இருந்து, இருந்தாப் போல் அக் காலங்களில் நடக்கும் இளைஞர் தாக்குதலை தொடர்ந்து நகருள் பிரவேசிக்கும் படைக்கலங்களை கண்டு கிலி கொள்ளும் மக்கள் கூட்டம் ................ அங்கங்கு தென்படும் சந்துகளில் மறைந்து கொள்வது வழமை.

அத்தகைய ஒரு சமயம் பார்த்துக்கொண்டே வந்த ரயில் கடவைப் பள்ளத்துள் ஒளிந்த ஐந்து பேர்களை அதனுள்ளே வைத்து இராணுவம் சுட்டுக்கொன்ற நிகழ்வும் மனதுள் நிழலாடுகிறது.

வலி வடக்குப் பகுதிகளால் இடம் பெயர்ந்து 1992 இல் மக்கள் யாழ்ப்பாணப் பகுதிகளில் தஞ்சம் அடைந்திருந்த காலத்தில் தான் இந்த வெட்டிரும்பு என்று அழைக்கப்பட்ட உருவத்தின் நடமாட்டங்களை காணக் கூடியதாக இருந்தது.

எதையோ வாயுள் முணுமுணுத்தபடி வீதிகளில் காணப்படும் மின் கம்பங்கள் ஒவ்வொன்றையும் தவறவிடாமல் வளைய சுற்றி வந்து நகர்ந்து கொண்டே இருக்கும்.

காங்கேசன்துறை அகலக்கடவையில் வந்து தரித்து நிற்கும் கப்பலில் இருந்து படைகள் சின்னச் சின்னப் போட்களில் கீரியேறிக் கொண்டிருந்தனர்.

‘அப்ப உந்த அறுவான்கள் என்ன பாத்துக் கொண்டிருந்தவங்களாம்.....”

‘அவங்க நல்ல நித்திரையாம் ...... சனங்கள் கதைக்குதுகள்..”

‘உவங்களை நம்பித்தான் நாங்களும் இருந்தம்......... உப்புடி இவங்கள் செய்யலாமே....”

‘அங்காலை மாதகல் பக்கம்...... சுருட்டை தன்னோடை நிண்ட பொடியளை தப்பிப் போக விட்டிட்டு தனிய நிண்டு அடிபட்டானாம்....”

எங்கை போகிறது? அடுத்த நேரம் என்னத்தைச் சாப்பிடுவது? புள்ளை குட்டியளோடை எங்க போய் ஒதுங்கிறது?

பிள்ளைகளின் படிப்பும் போச்சா இந்த யோசனைகளோடு உயிரைக் கையில் ஏந்திக்கொண்டு விரையும் கூட்டத்தில் புதினங்களை கதைத்தபடி நடந்தும், ஓடியும் விரைந்து கொண்டிருந்தனர்.

சுவாம்பிள்ளைக்கு பொழுதுபடுவதும், பொழுதுபட்டால் விடிவதும் தெரியாத வாழ்க்கை தான். கடந்த காலங்களில் மயிலிட்டி, என்.எஸ்.ஆர். முதலாளியின் மீன் லொறியில் ஐஸ் போட்ட மீன், இறால் பெட்டிகளை கொழும்புக்கு ஏற்றிப் பறிக்கும் வேலை செய்து வந்ததால் அவனுக்கு சிங்களம், இங்கிலீஷ் பாஷைகளும் ஓரளவுக்கு தெரிந்திருந்தன.

சின்னச் சின்னதாகத் தொடங்கிய பொடியளின் போராட்டம் கொஞ்சம், கொஞ்சமாக முத்திக்கொண்டே வளர்ந்ததால் சுவாம்பிள்ளேன்ரை காட்டிலை பெய்த மழையும் ஓய்ந்து போனது.

மலை, மாதகல், மயிலிட்டிக் கரையோரங்களில் ஆயுதங்களுடன் நூற்றுக்கணக்காய் இறங்கி விட்டார்களென்ற தகவல் விடியுது விடியுதென்க மயிலிட்டிக் கிராமம் எங்கும் பரவ தொடங்கி இருந்தன.

இரவோடு இரவாகப் படைத்தரப்பு மேற்கொண்டிருந்த நடவடிக்கைகளை யாருமே தெரிந்திருக்கவில்லை. ஆயத்தம் எதுவுமே இல்லாமல் இருந்த மக்கள் ஒருவரைப் பார்த்து ஒருவராக கைளில் அகப்பட்ட தேவைக்குரிய முக்கிய ஆவணங்கள், நகை, பணம், உடுதுணிகளை எடுத்துக்கொண்டு வசாவிளான், மாவிட்டபுரம், தெல்லிப்பளை வழியாக தெற்கு நோக்கி கூட்டம் கூட்டமாக வெளி

கொழும்பு போய் வந்தால் சுழையாகக் கிடைத்த நாள் சம்பளம் மட்டுமோ வத்தியது?

நாள் தோறும் சாராயம், ஸ்ரவுட், பியர், கோல்லைப் சிகரட் எல்லாமே உறஞ்சே போச்சு! குடிச்ச தவனத்துக்கு எதுவோ குடிக்கத் தேவைப்பட்டது உண்மைதான்.

காலையில் இருட்டுடன் மீன் கூடு, இறால் வலை,கணவாய்த் தூண்டல் எதையாவது கொண்டு கரையோர கடலில் அடிச்சு வந்து வீட்டுக்கு குடுக்கிறதைக் குடுத்திட்டு,தன்னுடைய தண்ணித் தேவைக்கும் சுவாம்பிள்ளை சேகரித்து வந்தான்.

ஒரு பெப்சிப் போத்தல் என்றால் ஒன்றரைப் போத்தல் வெட்டிரும்பு நூறு ரூபா தான். அதை சிலுக்கு, வடி, தண்டவாளம் என்னும் நாமா காரணங்கள் கொண்டும் குறிப்பிடுவார்.

இரண்டு பெப்சி போத்தல் சுவாம்பிள்ளைக்கு இரவுக்கும்,பகலுக்கும் தாக்காட்டும்.

‘கரைக்கடை முழுக்க ஆமி வந்திட்டாங்களாம்.... வந்தாங்க எண்டால் ஒருத்தரும் தப்பேலாது”

இந்த மனிசன் படுத்தாப் பிணந்தானை எணோய்..... எணோய் ............... எழும்பணை........... ஆமிக்காறன் வந்திட்டானாம்.... எழும்பு...”

‘ம்.....ம் ........... ஆமிகாறன் வரட்டும் நான் அவங்களோட சிங்களத்தில கதைப்பன் பேசாமை இருங்கடி..”

‘அம்மா நீ வாணை.......... சனங்களெல்லாம் போயிட்டுதுகள்.......... அவங்கட்டை அம்புட்டா எங்களை சுட்டுப் போடு வாங்கணை... அம்மாவா”

பிளேமினாவுக்கு கணவனை அந்த நிலையில் விட்டுப்போக மனம் வர வில்லை. ஒரு குமரையும், இரண்டு இளந்தாரியையும் வைச்சுக்கொண்டு புருஷனைப் பாத்தால் தன்னையும் அதுகளையும் இழக்க நேரிடும் என்னும் திடுகூடரான சிந்தனை சுவாம்பிள்ளையை படுக்கையில் விட்டு புறப்படவும் துணிச்சலைக் கொடுத்து.

பட்.. பட்..... புடபடபட.. பட் பட்..... படபடபட....”

எதிர்ப்பு இன்றி முன்னேறிய படையினர் துப்பாக்கி வேட்டுகளை தழுர்த்துக் கொண்டே கிராமத்துள் நுழைகையில் சத்தத்தில் முளித்துப் பார்த்த சுவாமிப்பிள்ளைக்கு அப்பொழுதே ஊரின் ஓச்சம் விளங்கியது.

கண்கள் இருள, தலையை இறுக்கிய மொச்சலை போக்க பெப்சிப் போத்தலில் மீதியாக வைத்திருந்த வெட்டிரும்பை மளமளவென்த் தொண்டைக்குள் ஊத்தினான்.

உடம்பில் ஏற்பட்ட புதிய தென்புடன் தினமும் தொழிலுக்கு போறவன் இன்றந்த நிலைமை இல்லாததை உணர வெகு நேரமாகவில்லை. அயல் ஒழுங்கையில் படையினரின் நடமாட்டம் வந்து விட்டதற்கு அறிகுறியாக உரையாடல்கள் சுவாம்பிள்ளையின் காதுகளில் விழுந்தன.

“மாஹாத்தையோ எண்ட..எண்ட மேதி மாவித்தராக் இன்னே... எண்டக்கோ..”

(ஐயாக்கள் வாங்க வாங்க இங்க நான் மட்டும் தான் இருக்கிறேன் வாங்கோ)

மூளைக்கு வேலை கொடுத்த சுவாம்பிள்ளை தான் முந்திக்கொண்டால் அவங்களுடைய தாக்குதலில் இருந்து தப்பிக் கொள்ளலாம் என்ற யோசனை பலன் அளித்தது.

‘மே .. அமதிபாலமே நாகி எக்கனக் இன்னே.. அணித் கட்டிய...ஏக்க கீல்ல”
(அமதிபால இஞ்சை கிழவனொருவன் இருக்கான் மற்ற எல்லோரும் போட்டினம்)

ஒருவன் குரல் வைத்ததும், தூர நின்றிருந்த இன்னொருவனும் சேர்ந்து சுவாம்பிள்ளையை நாடி வந்தனர்.. அவர்களுக்கு இவனை பார்த்ததும் புரிந்தது. இரவு நல்ல வெறி போட்டு படுத்திருந்த சங்கதி.

“மூ இன்னே கமக் நா. அப்பட்டத் உதவுவவே. நெத்த பியதாச.”(அவன் இருகிறது பறவாயில்லை. எங்களுக்கு உதவும் இல்லையா பியதாசா)

சுவாம்பிள்ளைக்கு சிங்களம் நன்றாக தெரிந்திருந்ததால் இருவரும் கதைத்து கொண்டது விளங்கியது. அதனால் தனக்கு எந்த ஆபத்தும் ஏற்பட்டுவிடாதென்ற தெளிவு பிறந்தது.

“மாஹாத்தையோ.. மட்ட ஹரீம பட கினி கண்ட பொண்ட மொக்கூத் திபுணுத் உதவு வக் ஹரன்ன”

(தொடர்ச்சி 18 இல்)

இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.

## சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 10

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..............................
..............................
சிறுகதையின் இலக்கம் : ..............................
எழுதியவர் பெயர் : ..............................
சிபார்சு செய்பவர் பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தொலைபேசி இலக்கம் : ..............................
.............................. ஆகிய நான்
இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

..............................
ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**



# எல்லோரையும் கவர்ந்த எஸ்.வி.ரங்காராவ்!

"முத்துக்கு முத்தாக சொத்துக்கு சொத்தாக அண்ணன் தம்பி பிறந்து வந்தோம் கண்ணுக்கு கண்ணாக அன்பாலே இணைந்து வந்தோம் "ஒண்ணுக்குள் ஒண்ணாக" "அன்புச் சகோதரர்கள்' படத்தில் இடம் பெற்றிருந்த இந்தப் பாடலைப் பாடி நடித்த நடிகர் எஸ்.வி. ரங்காராவை யாரும் மறந்திருக்க முடியாது. அந்தளவிற்கு பாசமான அண்ணனாக அவ்வளவு சிறப்பாக நடித்திருந்தார். இவர் திரைப்படங்களில் ஏற்று நடித்த கதாபாத்திரங்கள் அத்தனையும் மனித வாழ்க்கையில் மறக்க முடியாத ஒதுக்க முடியாத உன்னத உறவுகளை கொண்டதாக இருக்கும். நல்ல கணவன், பாசமான அண்ணன், அன்பான அப்பா, மறக்க முடியாத மாமனார், கம்பீரமான தாத்தா, கௌரவமான போலீஸ் அதிகாரி, ஊர் போற்றும் மனிதர், கொடூரமான வில்லன், மற்றும் மந்திரவாதி, புராண, இதிகாச கதாபாத்திரங்கள் என்று அத்தனை வேடங்களையும் ஏற்று சிறப்பாக நடித்தார். Buy Tickets இவருக்காக பல கதாபாத்திரங்கள் உருவாக்கப்பட்டன. சில கதாபாத்திரங்கள் இவர் நடித்தால்தான் சிறப்பாக இருக்கும் என இவரைத் தேடி வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட உன்னத கலைஞர் சிறந்த குணச்சித்திர நடிகர் எஸ்.வி.ரங்காராவ். இவர் தமிழ், தெலுங்கு என்று இருநூறுக்கு மேற்பட்ட படங்களில் நடித்திருக்கிறார். அத்ததனைப் படங்களும் பிரபலமான சூப்பர் ஹிட்டான படங்களாகும். விஜயா வாஹினி தயாரித்த 'பாதாள பைரவி' (1951) படம்தான் எஸ்.வி. ரங்காராவ் நடித்து அறிமுகமான முதல் தமிழ்ப் படம். இதில் மந்திரவாதியாக வேடமேற்று நடித்தார். 'மாயாபஜார்' படத்தில் கடோத்கஜனாக கொமெடி கலந்த வேடத்தில் நடித்தார். 'சம்பூர்ண இராமாயணம்' படத்தில் இராவணனாக நடித்தார். 'மிஸ்ஸியம்மா' வில் வாடகைக்கு வருபவர்களிடமும் பாசம் காட்டும் வீட்டு உரிமையாளர் வேடத்திலும் 'கற்பகம்' படத்தில் அப்பாவாகவும், நல்ல மாமனாராகவும் இரு மாறுபட்ட தோற்றத்திலும் நடித்தார். "நானும் ஒரு பெண்" படத்தில் கருமைநிறம் கொண்ட மருமகளை வெறுக்கவும் முடியாமல், ஏற்கவும் முடியாமல் தவிக்கும் நல்ல மாமனாராக நடித்தார். 'கைகொடுத்த தெய்வம்' படத்தில் வெகுளிப்பெண் (சாவித்ரி)யை பெற்றெடுத்து விட்டு அவஸ்தைப்படும் தந்தையாக நடித்திருந்தார். 'அன்னை' படத்தில் நடிப்பின் இலக்கணம் பி. பானுமதிக்கு ஜோடியாக நடித்தார். 'எங்கள்வீட்டுப் பிள்ளை' படத்தில் எம்.ஜி.ஆரின் மாமனாராக நடித்தார். 'படிக்காத மேதை' படத்தில் உலகம் தெரியாத ஒரு அப்பாவி மனிதனுக்கு அன் பைக் காட்டும் மாமாவாக நடித்தார். 'நீதிக்குப் பின் பாசம்' படத்தில் கௌரவமான உயர் போலீஸ் அதிகாரியாகவும், பிள்ளைக ளுக்கு பிரியமான தந்தையாகவும், மனை விக்கு அன்பான கணவனாகவும், வேறுபாடுகளைக் காட்டி நடித்தார். 'கண்கண்ட தெய்வம்' படத்தில் தன்னைச் சார்ந்து வாழும் அன்பான தம்பிக்கு நல்ல அண்ணனாகவும், அவரது குடும்பத்திற்கு பாதுகாவலராகவும் நடித்திருந்தார். 'அன்னை இல்லம்' படத்தில் சிவாஜிக்கு தந்தையாகவும், மனைவி எம்.வி. ராஜம்மாவிற்கு நல்ல கணவராகவும் நடித்திருந்தார். விஜயா சுரேஷ் புரொடக்ஷன்ஸ் தயாரித்த எம்.ஜி.ஆர்.நடித்த 'நம் நாடு' படத்தில் எம்.ஜி.ஆருடன் மோதும் வில்லனாகவும், 'ராஜா' படத்தில் கொடூரமான வில்லனாக சிவாஜியுடன் மோதுபவராகவும் நடித்திருந்தார். இப்படி பல படங்களில் பல்வேறு விதமான வேடங்களை ஏற்று தனது குணச்சித்திர நடிப்பை வெளிப்படுத்தி அனைவரின் பாராட்டுக்களைப் பெற்றார் எஸ்.வி. ரங்காராவ். டைரக்டர் கே.எஸ். கோபால் கிருஷ்ணன் தனது படத்தில் எஸ்.வி. ரங்கராவ் தான் நடிக்க வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நடிக்கவிருந்த ஒரு பெரியபடத்தை இயக்குகின்ற வாய்ப்பையே இழந்தார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், டைரக்டர் கே.எஸ். கோபாலகிருஷ்ணன் அவர்களும் தொடர்ந்து தங்களது படங்களை வெற்றிப் படங்களாக்கி வெற்றி வலம் வந்து கொண்டிருந்த காலகட்ட மது. இருவரும் இணைந்து ஒரு படத்திலா வது பணியாற்ற வேண்டுமென்று விரும்பினார்கள். எம்.ஜி.ஆர். அவர்களும் கதை கேட்டார். அதற்காக அப்போது ரெடி பண்ணி வைத்திருந்த 'கற்பகம்' படத்தின் கதையைப் போய் சொன்னார் டைரக்டர் கே.எஸ். கோபாலகிருஷ்ணன். எம்.ஜி.ஆரும் முழுமையாக கதையை கேட்டுவிட்டு நடிக்கச் சம்மதித்தார். அதன்பிறகு மற்ற கேரக்டர்களில் யார்? யார்? நடிப்பது என்று கலந்து பேசினார்கள். அப்போது டைரக்டர் கே.எஸ். ஜி. 'கற்பகம்' படத்தில் வரும் மாமனார் கேரக்டரில் நடிகர் எஸ்.வி.ரங்காராவை நடிக்க வைக்கப் போவதாகச் சொன்னார். அதற்கு எம்.ஜி.ஆர்.அவர்கள் மற்ற கேரக்டர் களுக்கு உங்கள் விருப்பபடி யாரை வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள். ஆனால் மாமனார் கேரக்டரில் டி.எஸ். பாலையா மட்டும் நடிக்கட்டும் என்றார். அதற்கு கே.எஸ்.ஜி. யோசித்து சொல்வதாக வீட்டிற்கு வந்துவிட்டார். வந்த சில நாட்கள் யோசித்துவிட்டு இந்த மாமனார் கேரக்டருக்கு எஸ்.வி. ரங்காராவ்தான் பொருத்தமாக இருப்பார் என்னை மன்னித்துவிடுங்கள் என்றார் டைரக்டர். எம்.ஜி. ஆரும் நீங்களும் என்னை மன்னித்து விடுங்கள் இந்தப் படத்திற்கு வேறு யாரையாவது கதா நாயகனாகப் போட்டு படத்தை எடுங் கள் என்று சொல்லிவிட்டார். அதனால் தான் 'கற்பகம்' படத்தில் ஜெமினி கணேசன் கதாநாயகனாக நடித்தார். எம்.ஜி.ஆர்.அவர்கள் டி.எஸ். பாலையாவை சிபாரிசு செய்ததற்கு காரணம், ஆரம்ப காலத்தில் கதா நாயகனாக நடிப்பதற்கு வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு படத்தில் டி.எஸ்.பாலையாவும் எம்.ஜி.ஆரும் இணைந்து நடிப்பதற்கு வாய்ப்பு வந்தது. அப்போது பாலையா அவர்கள் எம்.ஜி.ஆர். அவர்கள் கதாநாயகனாக நடிக்கட்டும், நானும் மற்றொரு கேரக்டரில் இணைந்து நடிக்கிறேன் என்று எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார். அதற்கு நன்றிக்கடன் செலுத்தும் விதமாகத்தான் அவரை சிபாரிசு செய்திருக்கிறார் என் பது பின்னாளில் தெரிய வந்தது. நடிகர் எஸ்.வி.ரங்காராவ் 3.07.1918 ஆம் ஆண்டு எஸ்.கோட்டீஸ்வரராவ் - நரசம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். ஆந்திராவிலுள்ள நுஜ்வித் என்ற கிராமம் தான் இவருடைய பிறப்பிடமாகும். இவருடன் உடன் பிறந்தவர்கள் ஆண்கள், பெண்கள் என்று 11 பேர். மனைவி பெயர் லீலாவதி தேவி, மகன் (அமரர்) கோட்டீஸ்வரராவ், மகள்கள் விஜயலட்சுமி, பிரமிளாதேவி. இருவரும் அமெரிக்காவில் இருக்கிறார்கள். இவர் சினிமாவிற்கு வருவதற்கு முன்பு பி.எஸ்.ஸி. பட்டப்படிப்பை முடித்ததும் காக்கி நாடாவிலுள்ள யங்மேன்ஸ் ஹப்பி கிளப்பில் சேர்ந்து தெலுங்கு மொழி, வசன உச்சரிப்பு, குச்சுபிடி நடனம், நாட்டியம், நாடக நடிப்பு ஆகியவற்றைக் கற்றுக் கொண்டார். இந்தப் பாசறையில் சேர்ந்து பயிற்சி பெற்று வெளிவந்து. பின்னாளில் புகழ் பெற்றவர்கள் அஞ்சலி தேவி, இயக்குனர் பி.புல்லையா, இசையமைப்பாளர் ஆதி நாராயணராவ். எஸ்.வி.ரங்காராவ் படிக்கின்ற காலத்தில் ஆசிரியர்கள், நிர்வாகத்தினரிடமிருந்து ஒழுக்கமான மாணவர் என்று நற்சான்றிதழ் பெற்றிருக்கிறார். இவர் 'சதுரங்கம்', பாந்தவியா' (தமிழில் வெளிவந்த கண்கண்ட தெய்வம்) போன்ற படங்களை இயக்கியிருக்கிறார். எஸ்.வி. ரங்காராவ் அவர்கள் சினிமா ஆசையில் சென்னை வந்தபோது ஜெமினி ஸ்டுடியோவிற்கு போய் அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த ஆர். கணேஷ் (இவர் பின்னாளில் ஜெமினிகணேசன் என்று பெயர் மாற்றிக் கொண்டார்) என்பவரிடம் தான் முதன் முதலில் வாய்ப்பு கேட்டிருக்கிறார். எந்த வாய்ப்பும் இப்போது இல்லை என்று திருப்பி அனுப்பியிருக்கிறார். எஸ்.வி. ரங்காராவ், திருவேலிக்கேணி, தியாகராயர் நகரில் (அபிபுல்லா ரோடு) தான் தனது இறுதிக் காலத்தில் குடும்பத்தாருடன் குடியிருந்திருக்கிறார். 1946 ஆம் ஆண்டு 'விருதினி' என்ற தெலுங்கு படத்தின் மூலம் நடிகரானார் எஸ்.வி. ரங்காராவ். அவர் கடைசியாக நடித்த படம் சிவாஜி நடித்த 'சிவகாமியின் செல்வன்' (1974) சுமார் 28 ஆண்டுகள் திரைப்படத் துறையில் தனது கலைப் பயணத்தை தொடர்ந்த ரங்காராவ் 18.07.1987 ஆம் ஆண்டு காலமானார். அதாவது அவர் பிறந்ததும் மறைந்ததும் இதே ஜுலை மாதத்தில்தான்!



# தண்ணீர் தண்ணீர்

குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க, கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டத் திற்கு அரசுகள் பல்லாயிரம் கோடிக் கணக்கில் எஸ்டிமேட் போட்டுக் கொண்டிருக்க, இத்தாலியில் ஒருவர் சிறியதாய் 'மூட்டைப்பூச்சியைக் கொல்லும் நவீன மெஷின்' போல ஓர் இயந்திரத்தை இதற்கென குறைந்த பொருட் செலவில் வடிவமைத்தே விட்டார். நம் ஊரில் கோழிகளை அடைக்கும் குடாப்பு போன்ற வடிவத்தில் இருக்கும் இதை டெரகோட்டாவையும், மறுசுழற்சி செய்யப்பட்டபிளாஸ்டிக்கையும்பயன்படுத்தி வடிவமைத்திருக்கிறார். கேப்ரில்லி-டியா-மண்டி. இவர் இத்தாலியின் மிலனோ நகரைச் சேர்ந்த வடிவமைப்பாளர். இதற்கு முன்பும் இதுபோலவே சில வித்தியாசமான பொருட்களையும் இவர் உருவாக்கி இருக்கிறார்.





"'எலியோ டொமெஸ்டிகோ' எனப் பெயர் வைக்கப்பட்டிருக்கும் இந்த சட்டியின் மேல்மூடியைத் திறந்து சுத்திகரிக்கப்படாத கடல்நீரை ஊற்றி சூரிய ஒளி படுமாறு வெயிலில் வைத்துவிட்டு மாலை வரை காத்திருக்க வேண்டும். எட்டு மணி நேரத்திற்குப் பிறகு, இதன் அடிப் பகுதியில் தேங்கியிருக்கும் தண்ணீர் நாம் குடிப்பதற்கு ஏற்றதாகும். இந்த இயந்திரம் செயல்படுவதற்கு மின்சாரம் தேவையில்லை, பராமரிப்புச் செலவு எனத் தனியாக எதுவுமில்லை. எனவே, இதைத் தனிநபர்கள் தங்கள் வீடுகளில் எளிதாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்கிறார் கேப்ரில்லி-டியா-மண்டி.

'எலியோ' என்றால் இத்தாலிய மொழியில் சூரியக் கடவுள் எனப் பொருள். இந்த இயந்திரத்தில் தினமும் ஐந்து லீட்டர் தண்ணீரைச் சுத்திகரிக்க முடியுமாம். இந்தக் கண்டுபிடிப்புக்குக் காப்புரிமை வாங்கியிருக்கும் இவர், அரசோடு இணைந்து பணியாற்றவும் விருப்பம் தெரிவித்துள்ளார். எனினும், 'எலியோ டொமெஸ்டிகோ' வின் மூலம் சுத்திகரிக்கப்படும் தண்ணீரை நீண்ட நாட்களுக்கு வைத்துப் பயன்படுத்த முடியாது எனவும் கூறுகிறார்கள்.




# இணைய உரையாடலும் அதன் சிறப்பம்சங்களும்

## INTERNET RELAY CHAT
**இணைய உரையாடல்**

> Online Chatting
> (Details)
> நேரடி இணைய உரையாடல்
> (விபரங்கள் )
>
> நேரடியாக ஒரே நேரத்தில் தகவல்கள், எழுத்துகோவைகள், புகைப்படங்கள், ஒலி ஒளி குறிப்புக்கள் போன்றவற்றை பரிமாறிக்கொள்ளும் ஒருமுறையே இணைய உரையாடல் முறையாகும்.
>
> Web Based Chatting
> (இணையத்தள அடிப்படை உரையாடல்)

இங்கு படத்தில் காட்டப்பட்ட Web Server என்பது இணைய உரையாடல் சேவை வழங்குநர் ஆகும். இங்கு காண்பிக்கப்பட்டுள்ள Web Browser என்பது இணைய உலாவியாகும். Chatting App என்பது உரையாடல் பிரயோக மென் பொருளாகும்.

இங்கு பயனாளிகளின் இணைய உலாவியே சேவகன் மென்பொருளாக பயன்படுத்தப்படுகிறது. Java மென்பொருட்களே பெரும்பாலும் இத்தகைய இணைய உலாவிகள் உள்ள கணனிகளுக்கு தரவிறக்கம்செய்யப்படுகிறது. குறிப்பிட்ட சேவை வழங்குநருடன் தொடர்பில் உள்ள இணைய உலாவிகள் அல்லது கணினிகளுடனேயே நாம் உரையாடலாம்.


பங்குச் சந்தை, விளையாட்டு, செய்திகள், சினிமா, களியாட்டம், சதுரங்கம் (Chess) என பல்வேறு துறைகளில் உரையாடல் சேவை உள்ளது.

பிரத்தியேக பிரபல இணையத்தள சேவைகளை வழங்கும் இணையத் தளங்கள் சில வழங்கப்பட்டுள்ளன.

chat.yahoo.com

chat.msn.com

சாதாரணமாக இணைய உரையாடல்கள் எல்லாம் IRC (Internet Relay Chat)




எனும் உரையாடல் நடைமுறையையே பின்பற்றுகின்றன. IRC என்பது இணைய உரையாடல் சேவை வழங்குநர்கள் ஒன்றுக் கொன்று தொடர்புவைத்துக் கொள்ளக் கூடிய ஒரு வலையமைப்பாகும். இதன் மூலம் சாதாரணமாக IRC உடன் தொடர்பை ஏற்படுத்தும் வாடிக்கையாளர் கணீனிகளுக்கு ஒரு சேவை வழங்குருடன் மட்டுமல்லாமல் உலகில் பல சேவை வழங்குநர்களுடன் தொடர்பை ஒரே தடவையில் ஏற்படுத்த முடியும்.

இணைய உரையாடல் 1988 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் 100 IRC வலையமைப்புகள் உலகளாவிய ரீதியில் உள்ளன என கணக்கிடப்பட்டுள்ளன.


உரையாடல்களில் உங்கள் முகம் மற்றும் ஒலியையும் இணைக்கலாம்.

SKYPE - இதற்கு நல்ல உதாரணம்.

Internet Relay Chat

மேலதிக தகவல்களுக்கு,

கீழ் காணும் இணையத்தளங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.




- NewIRCusers.com - a great starting point
- IRCHELP.ORG - Another great starting point - includes resources such as The IRC Prelude , An IRC Tutorial , etc.
- mirc home page - home of popular IRC client and provides good description of the newsgroups.
- ICQ - a very popular Chat client that also keeps tracks of when you friends are online. ICQ can be used to launch most other types of peer-to-peer communications.
- How Instant Messaging Works (from howstuffworks.com)

உரையாடல்களில் நீண்ட வசனங்கள் அல்லது முழுமையான வாக்கியங்கள் எழு துவது பாரம்பரியம் அல்ல. அதற்கென சில சுருக்க எழுத்துக்கள் உண்டு. இதனால் நேரம் சிக்கனப்படுத்தப்படுகிறது. மீதப்படுத்தப்படுகிறது. அடுத்து கணினி உரை யாடல்களில் பயன்படுத்தப்படும் சுருக்க எழுத்துக்கள் சிலவற்றையும் குறியீடுகளையும் தருகிறோம். இவற்றில் பல சர்வதேச அங்கீகாரம் பெற்றவை. விபரம் வருமாறு:

(தொடரும் .....)

**உங்களுக்கு கணினி தொடர்பான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருப்பின் நீங்கள் கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.**

yogaraj35@gmail.com
ஜெ.யோகராஜ் (email : yogaraj35@gmail.com)

# பவர் பட்டினின் அர்த்தம் தெரியுமா?



நீங்கள் இந்த குறியீட்டை எல்லா இடங்களிலும் பார்த்து இருக்க முடியும். நீங்கள் ஒன் செய்து ஒப் செய்யும் உங்கள் மொபைல், டிவி, லப்டொப், மைக்ரோவேவ் அவன், வோஷிங் மெஷின் உள்பட அனைத்து எலக்ட்ரிக்கல் அல்லது எலக்ட்ரோனிக்ஸ் பொருட்களின் பவர் பட்டன் மீது இந்த குறியீடு இருக்கும்.

ஆனால் இந்த குறியீட்டுக்கான அர்த்தம் என்னவென்று உங்களுக்கு தெரியுமா? எந்த லொஜிக் அடிப்படையில் அந்த குறியீட்டை டிசைன் செய்துள்ளார்கள் என்பது பற்றி உங்களுக்கு ஏதாவது ஐடியா இருக்கிறதா?

நீங்கள் மேல் சிலைடரில் இருக்கும் பவர் பட்டன் படத்தை நன்றாக உற்றுப்பாருங்கள். முதலில் படித்துக் கொண்டிருந்ததால், அந்த படத்தை சரியாக பார்த்திருக்க வாய்ப்பு குறைவாக இருந்திருக்கும்.

அடுத்த படத்தை மீண்டும் பாருங்கள். அதில் I மற்றும் O என்று பொறிக்கப்பட்டிருக்கும்.

3 ஆவது படத்தை பாருங்கள், உடைந்த வளையத்தில் 1 மற்றும் O என்று இருப்பது போல் தெரிகிறதா?

இரண்டாவது உலகப் போரின் போது என்ஜினியர்கள் பைனரி சிஸ்டத்தின்படி பவர் பட்டனுக்கு இந்த குறியீட்டை பயன்படுத்தினார்கள்.

பைனரி சிஸ்டத்தின் படி 1 என்றால் 'on' என்றும் O என்றால் 'off' என்று அர்த்தம்.


இறுதியாக 1973 ஆம் ஆண்டு சர்வதேச எலக்ட்ரோனிக் கமிஷன் (IEC), பவர் பட்டனுக்கு அந்த குறியீடு தான் பயன்படுத்த வேண்டும் என்று வரைமுறை வகுத்தது.

பவர் பட்டன் குறியீடு பல்வேறு பொட்களில் இருக்கிறது. அது on மற்றும் off என்ற வடிவியே அவை செயல்படுகிறது. அதனால் தான் அவை I மற்றும் O என்று வேறுபடுத்தப்பட்டுள்ளது.

பல்வேறு வகையான பட்டன்களும், on மற்றும் off என்ற வடிவில் தான் உள்ளது. அதனால் தான் இந்த குறியீடு வைக்கப்பட்டுள்ளது.

NYC condom wrappery இந்த பவர் பட்டன் குறியீடு பயன்படுத்தப்படுகிறது.

# குடிச்சா வண்டி நகராதில்ல..



மது அருந்தி விட்டு வாகனத்தை ஸ்டார்ட் செய்தாலே, இன்ஜின் ஸ்டார்ட் ஆகாத வகையில் ஒரு கருவியை கண்டு பிடித்துள்ளார்.

இது குறித்து அந்த மாணவன் கூறுகையில், புத்தாக்க அறிவியல் ஆய்வு விருதுக்காக மது போதையால் ஏற்படும் உயிர் இழப்பைத் தடுக்க ஒரு கருவியை உருவாக்கினேன்.

குடியை குடியை கெடுக்கும் என எத்தனையோ முறை சொன்னாலும் ஒழிந்த பாடில்லை, மதுவால் அழிந்த குடும்பங்கள் ஏராளம்.

இதனால் தினமும் எத்தனையோ சாலை விபத்துகள் ஏற்படுகின்றன, இதுபோன்ற விபத்துகளை தடுக்க 9ம் வகுப்பு படிக்கும் மாணவன் புதிய கருவி ஒன்றை கண்டுபிடித்துள்ளான்.


சிவகங்கை மாவட்டம் திருவேலங்குடி அரசு பள்ளியை சேர்ந்த 9ஆம் வகுப்பு மாணவர் பிரேம்குமார்,

இக்கருவியில் பொருத்தப்பட்டுள்ள அல்கஹோல் சென்சார் மதுவாடையை உணரும். இத்துடன் Capacitor, Transistor சேர்ந்த ஒரு Integrated Circuit இணைக்கப்பட்டுள்ளது.

மது வாடையை உணர்ந்தவுடன் சாவி போட்டு ஸ்டார்ட் செய்யும் இடத்திற்கு செல்லும் மின்சாரத்தை தடுத்து விடும். இதனால் இன்ஜின் இயக்கம் தானாக நின்று விடும்.

மது குடித்து விட்டு, எவ்வளவுதான் 'உருண்டு புரண்டாலும்' வாகனம் ஸ்டார்ட் ஆகாது, இந்த கருவியை டூவீலரிலும் வைக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.


யாழ்ப்பாணத்தில் பண்டார வன்னியன்




# அஞ்சா நெஞ்சன் பண்டார வன்னியன்

இலங்கையின் வடக்குப் பிரதேசத்தின் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள் இணைந்த பகுதிதான் வன்னி நிலம். வடக்கே கிளிநொச்சி, தெற்கே மதவாச்சி, கிழக்கு மேற்கு பகுதியில் கடலாகவும் உள்ள பிரதேசம் அது. அங்கு கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் கிணறுகள் வன்னியின் தொன்மையை உணர்த்தியுள்ளன.

யாழ்ப்பாண வைபவ மாலை என்ற நூலின் படி சோழப் பேரரசின் காலத்தில் இலங்கையை ஆட்சிபுரிய அனுப்பப்பட்ட வட தமிழகத்து வன்னியகுல தளபதியர்களின்


வவுனியாவில் பண்டார வன்னியன்

வழி வந்தவன்தான் பண்டார வன்னியன். வன்னியர் என்பதற்கு வலிமையுடையோர் என்று பொருள்.

பண்டார வன்னியன் காலத்துக்கும் முன்பே, 1621 ஆம் ஆண்டு போர்த்துக்கீசியர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போதும்கூடவன்னிப்பகுதிக்குள்அவர்களால் கால்பதிக்க முடியவில்லை. கடைசிவரை வன்னிக்குள் காலூன்ற முடியாமலேயே இலங்கையில் போர்த்துக்கீசிய அதிகாரம் முடிவுக்கு வந்தது.

வன்னிக்குள் முதலில் வெற்றிகரமாக நுழைந்தவர்கள் டச்சுக்காரர்கள்தான், டச்சுக்காரர்கள் இலங்கைத் தீவைக் கைப்பற்ற வந்த போதே தமிழர் ஆட்சி அங்கு நிலவியது என்பதை அவர்களின் சிலர் எழுதியகுறிப்பு ஏடுகளில் காணலாம்.

1782 இல் வன்னியை கைப்பற்ற அவர்கள் நடத்திய போர் பற்றி எழுதும் லூயி என்ற வரலாற்று ஆசிரியர், "டச்சுக்காரர்கள் எத்தனையோ நாடுகளில் போர் புரிந்திருக்கிறார்கள். ஆனால் இப்படி வீரத்துடன் போரிட்டவர்களை உலகில் வேறு எங்கும் அவர்கள் காணவில்லை" என்று குறிப்பிடுகிறார்.

(இலங்கையின் வரலாற்றில் திருகோணமலையைக் கைப்பற்றவே பலரும் போரிட்டு மடிவது வழக்கம். அதே காரணத்துக்காக பண்டார வன்னியன் வாழ்ந்த அதே காலத்தில் கண்டி மன்னனுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையில் யுத்தம் நடந்தது. அந்நேரத்தில் இருந்த சக்தி வாய்ந்த ஆங்கிலேயப் பிரதிநிதி ராபர்ட் நாக்ஸ் என்பவன் கண்டி மன்னனால் மூதூர் என்ற ஊரில் வைத்துச் சிறைப் பிடிக்கப்பட்டான். பல வருடங்கள் சிறையில் கழித்த ராபர்ட் எப்படியோ சிறையில் இருந்து தப்பி அனுராதபுரத்தை நோக்கி ஓடினான். அனுராதபுரத்தை அடைந்தவுடன் அங்குள்ள மக்களையும் ஆட்சியையும் பார்த்து வியப்படைந்தான். அங்கு ஆட்சி செய்த மன்னனும் தமிழ் மன்னன்தான். அவன் பெயர் கைலாய வன்னியன்.

ராபர்ட் நாக்ஸ் தனது குறிப்பேட்டில் தான் வடக்காக தப்பிச்சென்ற போது வயல்வெளிகளை எருதுகள் உழுவதையும் அங்குள்ள மக்கள் சிங்கள மொழியை பேசவில்லை என்றும் அவர்களுக்கு சிங்கள மொழியே தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளான்.

மேலும் அங்கு கயிலாய வன்னியன் ஆட்சிசெய்த நாட்டை கயிலாய வன்னியன் நாடு என்றும் அவன் யாழ்ப்பாணத்தின் தெற்கு மற்றும் வன்னியின் கிழக்குப் பகுதியையும் ஆண்டு வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளான் ராபர்ட் நாக்ஸ்)

டச்சுக்காரர்கள் காலத்திலும் பின்னர் ஆங்கிலேயர்ஆட்சியைஎதிர்த்தும்மன்னார், திருகோணமலை வன்னிக்காடுகள் என வன்னிமக்கள் இடைவிடாமல் போர் நடத்தி வந்தனர். அவர்களின் வழியில் வந்த மறக்க முடியாத மாவீரன்தான் பண்டார வன்னியன்.

வெள்ளையர்கள் முல்லைத்தீவில் அமைத்திருந்த கோட்டையை முற்றாக அழித்து நிர்மூலம் செய்தவன் பண்டார வன்னியன்.

அவனது முழுப்பெயர் குலசேகரம் வைர முத்து பண்டார வன்னியன்.

முல்லைத்தீவில் இருந்து வற்றாப்பளை அம்மன் கோவில் வரை உள்ள 2000 சதுர மைல் நிலத்தை ஆட்சி செய்து வந்தான் பண்டாரவன்னியன். தனது சகோதரர்களை முக்கிய பதவிகளில் வைத்து ஆட்சி செய்து வந்தான். தனது தம்பி கைலாய வன்னியனை அமைச்சராகவும் தனது இறுதி சகோதரன் பெரிய மன்னன் என்ற பெயருடையவனை தளபதியாகவும் நியமித்திருந்தான்.

அதே நேரம் காக்கை வன்னியன் எனும் இன்னொரு மன்னன் வன்னியின் இன்னொரு நிலப்பரப்பை ஆண்டு வந்தான்.

பண்டாரவன்னியனுக்கு நளாயினி என்ற சகோதரியும் உண்டு. நளாயினி தமது அவைப் புலவர் மீது காதல் கொண்டிருந்தாள்.

மன்னன் காக்கை வன்னியன் (மேற் குறிப்பிட்ட, இன்னொரு நிலப்பகுதி மன்னன்) நளாயினி மீது காதல் கொண்டு அவளைத் திருமணம் செய்து தரும்படி பலமுறை பண்டார வன்னியனுக்கு சேதி அனுப்பியிருந்தான். ஆனால் பண்டாரவன்னியன் ஏதோ காரணத்தால் தயங்கி இருக்கிறான்.

இந் நிலையில் புலவரும் நளாயினியும் காதல் கொண்டுள்ளதை கண்ட காக்கை வன்னியன் கோபம் கொண்டு புலவருடன் போரிட்டான். போரில் வென்றது புலவன்! எனினும் பக்கத்து நாட்டு மன்னன் என்பதாலோ என்னவோ, மன்னனை உயிரோடு திருப்பி அனுப்பினான். அதன் பின்புதான் புலவனும் அரச குலத்தில் வந்தவன் என்பது பண்டார வன்னியனுக்குத் தெரிந்திருகிறது. எனவே தனது சகோதரியின் காதலுக்குச் சம்மதித்தான் பண்டார வன்னியன்.

*டச்சுக்காரர்கள் காலத்திலும் பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்தும் மன்னார், திருகோணமலை வன்னிக்காடுகள் என வன்னிமக்கள் இடைவிடாமல் போர் நடத்தி வந்தனர். அவர்களின் வழியில் வந்த மறக்க முடியாத மாவீரன்தான் பண்டார வன்னியன். வெள்ளையர்கள் முல்லைத்தீவில் அமைத்திருந்த கோட்டையை முற்றாக அழித்து நிர்மூலம் செய்தவன் பண்டார வன்னியன். அவனது முழுப்பெயர் குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன்.*

விஷயம் அறிந்த காக்கை வன்னியன் பொருமினான். பண்டாரவன்னியன் மீது வெள்ளையர்கள் பலமுறை படை எடுத்து தோல்வி அடைவதைப பார்த்த காக்கை வன்னியன், தன் ஆசையின் தோல்விக்குப் பழி தீர்க்க வெள்ளையர்களுடன் சேர்ந்து சதி செய்து பண்டார வன்னியனை கொல்லத் திட்டமிட்டான்.

நல்லவன் போல நடித்து பண்டார வன்னியனிடம் மன்னிப்பு கேட்டு சேர்ந்து கொண்டு சமயம் பார்த்து ஆங்கிலப் படைகளிடம் பண்டார வன்னியனை சிக்க வைத்தான்.

பலமுறை படை எடுத்து வந்தும் வெல்ல முடியாத பண்டார வன்னியனை மூன்று பக்கத்தில் இருந்தும் படை எடுத்து வந்து தாக்கி வென்றனர்.

1803 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 31 ஆம் நாள் கற்சிலைமடு என்ற இடத்தில் ஆங்கிலேய தளபதி ரிபேக் என்பவனால் பண்டாரவன்னியன் கொல்லப்பட்டான்.

எனினும் அவனது வீரத்தை வியந்து அவனைக் கொன்ற அந்த ஆங்கிலேயத் தளபதி ரிபேக்கே பண்டார வன்னியனுக்கு சிலை ஒன்றும் நடுகல் சின்னமும் வைத்தான்.

ஒருவனுக்கு அவனுக்கு பிடித்தவர்கள் உறவினர்கள் யார் வேண்டுமென்றாலும் சிலை வைக்கலாம். ஆனால் எதிரியாலேயே வைக்கப்பட்ட சிலை பண்டாரவன்னியன் சிலை.

இந்த நூற்றாண்டில் இந்த ஆண்டில் சுமார் இரண்டு வாரம் வரை காலத்தை வென்று நின்றிருந்த அந்த நடுகல்லைதான்



தற்போது உடைத்து இருக்கின்றனர் சிங்கள வெறியர்கள். இது சிங்களனின் அற்ப புத்தியையே காட்டுகிறது.

முல்லைமணி என்பவர் மற்றும் அவர்களின் சக நண்பர்களின் முயற்சியின் விளைவாய் எத்தனையே ஆண்டுகளுக்குப் பிறகு 2002 ஆம்ஆண்டு கற்சிலைமடுவில் பனைமரக் காட்டில் பண்டார வன்னியனுக்கு புதிய சிலை ஒன்றும் நிறுவப்பட்டது.

பண்டார வன்னியன் ஆண்ட நாட்டின் எல்லையாக இருந்த வற்றாப்பளையில் உப்பு நீரிலே விளக்கெரியும் கண்ணகி அம்மன் ஆலயம் இருக்கிறது.

போர்வாளைத் தனது கொடியின் சின்னமாகக் கொண்டு, புலியெனப் பாய்ந்து களம் பல கண்ட, பண்டார வன்னியனின் உருவமோ உயர்ந்த தோற்றம்! விரிந்த மார்பு! ஒடுங்கிய இடை! பரந்த நெற்றி! உரமேறிய தோள்கள்! கூரிய பார்வை! அந்தத் தீரன் அஞ்சாநெஞ்சன்.

# ஆன்மீகம்

## விரத வழிபாட்டின் முதற்படி



விரதம் என்பதற்கு ஒன்றையே எண்ணி அதில் மனம் இலயித்திருத்தல் என்பது பொருள். வரித்தல் என்பதிலிருந்தே விரதம் என்ற சொல் பிறந்தது என்று கூறலாம். வரித்தல் என்பதற்கு கை கொள்ளுதல் அல்லது ஏற்றுக் கொள்ளுதல் என்பது பொருள். உணவு உண்ணாமலிருத்தலும் மிதமாக உணவை உண்பதும் தீயவற்றை நீக்கிநல்லவற்றைஉண்பதுமாகியஉணவு நியமமே 'விரதம்' என அழைக்கப்படுகிறது. ஆனால் இது விரதத்தின் முதற் நிலை என்றுதான் சொல்ல வேண்டும். இவ்வாறு இருத்தலே முழுமையான விரதம் என்று கூற முடியாது. மனம் அடங்கக் கற்பதே விரதத்தின் முதற்படியாகும். உணவை ஒழித்து இருப்பது விரதம் அல்ல. எண் ணங்களை ஒடுக்கி, சிந்தைகள் ஏதும் இல்லாமல் இருப்பதே 'விரதம்' என்கிறார் ரமணர். குரங்கு போல் அலைந்து திரியும் மனத்தை அடக்கி நிறுத்தி இறைவன் திருவடியில் நிலைத்திருத்தலே சிறப்பான விரதத்தின் முதற்படி என்று கூறலாம்.

## துர்க்கை அம்மனின் கைகளில் உள்ள ஆயுதங்களும் – அதன் அர்த்தங்களும்

மிகவும் சக்தி வாய்ந்த அம்மனாக பார்க்கப்படும் துர்க்கை படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் என்ற அனைத்து செயல்களையும் வழி நடத்துகிறார். துர்கா என்ற வார்த்தைக்கு 'வெல்ல முடியாத' என்ற அர்த்தமாகும். மனிதர்களின் கவலைகளையும், துன்பங்களையும் போக்குபவராக விளங்குகிறார் துர்க்கை அம்மன். துர்க்கை கையில் இருக்கும் ஒவ்வொரு ஆயுதமும் ஒவ்வொன்றை குறிக்கும்.

**வில்லும் அம்புகளும்** : கடவுளின் கையில் இருக்கும் வில்லும் அம்புகளும் ஆற்றலை குறிக்கும். தன் கையில் வில்லையும் அம்புகளையும் ஏந்தி நிற்பதால், அண்ட சராசரத்தில் உள்ள அனைத்து ஆற்றல் சக்திகளையும் கட்டுப்படுத்துபவர் அவர் என்பதை அது குறிக்கும்.

**இடியேறு** : கடவுளின் கையில் இருக்கும் இடியேறு அவரின் திடத்தை குறிக்கும். சவால்களை சந்திக்கும் போது இடியை மனதில் வைத்துக் கொண்டு சவால்களை சந்திக்க வேண்டும் என்று பக்தர்களுக்கு இது தூண்டுதலாக விளங்கும்.

**பாதி மலர்ந்த தாமரை** : துர்க்கை அம்மன் கையில் இருக்கும் பாதியாக பூத்த தாமரை, வெற்றி நிரந்தரமல்ல என்பதை குறிக்கும். மேலும் சேருக்கு மத்தியில் தாமரை



பூப்பதை போல், உலகத்தில் உள்ள பல சுகங்களுக்கு மத்தியில் மனித மனது ஆன்மீகத்தை நாட வேண்டும் என்பதையும் குறிக்கும்.

**வாள்** : துர்க்கை அம்மன் கையில் இருக்கும் வாள் அறிவை குறிக்கிறது. அறிவே உலகத்தில் மிகவும் சக்தி வாய்ந்ததாக விளங்குகிறது என்பதை குறிக்கிறது வாளின் பளபளப்பும் கூர்மையும். மேலும் அது துரு பிடிப்பதும் இல்லை என்பதையும் குறிக்கிறது.

**சுதர்சன் சக்ரா** : உலகம் தன் கட்டுப்பாட்டின் கீழ் தான் இயங்குகிறது என்பதை கடவுளின் ஆள் காட்டி விரலில் அழகாக சுழலும் சக்கரம் குறிக்கிறது. தீய சக்திகளை அளிக்க துர்க்கை அம்மன் இந்த ஆயுதத்தை பயன்படுத்துவார்.

**திரிசூலம்** : திரிசூலம் என்பது மூன்று அம்சங்ளை குறிக்கும் - சத்வா, ராஜாஸ் மற்றும் தாமாஸ். அமைதியையும் மோட்சத்தையும் அடைய ஒருவர் இந்த மூன்று அம்சங்களையும் சரிசமமாக கொண்டிருக்க வேண்டும்.


**அபாய முத்திரை** : கடவுளின் ஒரு கை எப்போதும் தன் பக்தர்களை ஆசீர்வதிக்கும் அபாய முத்திரையை கொண்டிருக்கும். தன் பக்தர்களை பயத்திலிருந்து எப்போதும் காப்பதை இது குறிக்கும்.



அத்தியாயம் 11

# சந்தர்ப்பவாதிகள்

கார்த்தி காலை 9 மணிக்கு வேலைக்குப் புறபபட்டுச் சென்றுவிட்டார். மதியம் 2 மணியளவில் வீடு திரும்புவேன் என்று கூறிவிட்டுச் சென்ற கார்த்தி, காலையில் நேரத்தோடு எழுந்து, சமையலை முடித்து



விட்டுத்தான் போயிருந்தார்.

கார்த்திக்கு வேலை செய்ய அனுமதி இல்லை. திருட்டுத்தனமாக பதிவு எதுவு மின்றி வாரத்தில் ஓரிரு நாட்கள் வேலை செய்து வருகிறார்.

“வடிவாச் சாப்பிடுங்கோ. பிரிட்ஜில சலாட் இருக்கு..” என்று சொல்லியபோது, பதிலுக்கு சரன் தலையாட்டி வைத்தார்.

ஆனால் அவரது திட்டம் வேறாக இருந்தது.

ஜேர்மனிக்குப் புறப்பட்டுச் சென்றால், அங்கு சாப்பிட்டு விட்டு, இலண்டன் கொண்டு செல்ல கொஞ்சம் பொருட்களையும் வாங்கி வரலாம் என்று அவர் நினைத்தார்.

நண்பன் சமைத்ததை இரவு சாப்பிடலாம் என்று முடிவெடுத்து விட்டு, ஆறுதலாக உட்கார்ந்து தேநீரைப் பருகலானார்.

முதல் நாள் நடந்த தனது நண்பர் உருத்திரனின் இறுதி மரணச் சடங்கு நிகழ்வுகள் மனத்திரையில் ஓடலாயின.

பெட்டிக்குள் கிடத்திக் கிடந்த நண்பரின் உடலைச் சுற்றி வந்து, தலைமாட்டில் நின்று அஞ்சலி செலுத்தியபோது, அவர் கண்கள் பனித்தன. ஒரு பெயரோடு உலாவிய இந்த உடம்பு, இன்று அதுவாகிக் கிடக்கின்றது என்று எண்ணிக் கொண்டார். அவர் அதுவாகி விட்டார்.

எந்தச் சாவு வீட்டிற்குப் போனாலும், அவர் கடைசிவரை நிற்பதில்லை. ஆனால் தன் நெருங்கிய நண்பனின் இறுதிச்சடங்குகளை கடைசிவரை சோகத்தோடு நின்று பார்த்த வர், சவப்பெட்டியை மூடி, உடலை எரிப்பதற்காக அதற்குரிய அறைக்குள் தள்ளி மூடும்வரை பார்த்துவிட்டுத்தான் அவர் வீடு திரும்பியிருந்தார். அழுது அழுது இனி அழ எம்மிடம் திராணி இல்லை என்ற நிலையில் நின்றிருந்த தாயிடமும் இரண்டு பெண்பிள்ளைகளிடம் சொல்லி விட்டு அவர் அந்தச் சவக்காலையை விட்டு வெளியேறிய சமயம், நெஞ்சம் சோகத்தால் கனத்திருந்தது.

முதல் நாள் இரவு எதையும் சாப்பிடப் பிடிக்காமல் ஒரு வாழைப்பழத்தைச் சாப் பிட்டுவிட்டு உறங்கச் சென்று விட்டார். நண்பன் கார்த்தி எவ்வளவு வற்புறுத்தியும், சாப்பிட மறுத்துவிட்டார் சரன்.

இன்றுதான் மனம் பழைய நிலைக்குத் திரும்பி இருக்கின்றது. என்றாலும் உருத் திரன் என்பவரை இனி என்றுமே நேரில் சந்திக்க முடியாது. பார்க்க முடியாது. பேச முடியாது. கூடச் சாப்பிட முடியாது என்ற நினைவு மனதுள் பேயாட்டம் போடவே செய்தது.

மரணம் என்பது சம்பந்தப்பட்டவரைச் சார்ந்தவரை எப்படியான வலிக்கு உட் படுத்தி விடுகின்றது என்று அவரால் நன்கு உணர்ந்து கொள்ள முடிந்தது.

நேரத்தைப் பார்த்தார். மணி பன்னி ரண்டாகி இருந்தது. முதல் நாள் மதியம் சாப்பிட்டபின்பு, இந்த நேரம் வரை எதையும் அவஉ சாப்பிடவில்லை. தன் நண்பனுக்காக தன் உடலை இப்படி வாட்டியதில் ஓர் அற்ப திருப்தி.

அறைக்கதவைப் பூட்டிவிட்டு வெளியே வந்தார். இரண்டு டிராம்கள் எடுத்தால்தான் ஜேர்மன் எல்லைக்குப் போகலாம். சில மாதங்களுக்கு முன்பு சுவிஸ் டிராம் சேவை, பாசல் நகரிலிருந்து, ஜேர்மன் எல்லை வரை நீடிக்கப்பட்டது பலருக்குப் பெரிய உதவியாக அமைந்து விட்டது. கைநிறையப் பொருட்களுடன் ஜேர்மன் எல்லையில் 15 நிமிடங்கள் நடந்து வந்து டிராம் எடுத்த காலம் மலையேறிப் போய்விட்டது. மேலதிக கட்டணம் ஏதுமின்றி, சௌகர்யமாக டிராமில் ஏறிப் பயணம் செல்லலாம். இந்தப் பணக்கார நாட்டில் எல்லாமே ஒழுங்குமுறையாக நடப்பதுதான் அதன் தனிச் சிறப்பு.

இராஜ கம்பீரத்தோடு வநத அழகிய பச்சை நிற டிராமில் ஏறிக் கொண்டார் சரன்.

எந்த நாட்டிலும் இல்லாத அழகிய டிராம்கள் இந்த நாட்டில்தான் இருக்கின்றன. நீண்ட காலத்திற்கு முன்பு மொஸ்கோ நகரில் டிராமில் பயணித்தபோது, அதன் தோற்றம் அவர் ஞாபகத்திற்கு வந்தது. டென்மார்க்கின் கொப்பன்ஹாம் நகர டிராம்கள் கண்முன் வந்து போயின. இலண்டனில் விம்பிள்டன் பிராந்தியத்தில் மட்டும் சேவையில் ஈடுபடுத் தப்பட்டுள்ள டிராம் மனதுள் நிழ லாடியது.

எந்தக் கொம்பன் வந்தாலும், சுவிஸ் டிராம்கள், குறிப்பாக பாசல் டிராம் சேவை யைத் தோற்கடிக்க உலகில் வேறு எந்தச் சேவையும் இல்லையென்ப் பெருமையோடு நினைத்துக் கொண்டார்.

அவர் பிறப்பால் இலங்கைத் தமிழன். ஆனால் 29 வருடங்கள் சுவிஸ் நாட்டில் வாழ்ந்துவிட்டு அவர் இப்பொழுது சுவிஸ் பிரஜை. அதவாது பெற்ற தாய் இலங்கை என்றால் வளர்ப்புத் தாய் சுவிட்சர்லாந்து.

எத்தனை தரம் பார்த்தாலும் அலுப் புத் தட்டாத வெளி அழகை டிராம் சார ளங்கள் ஊடாக அவர் பார்த்து ரசிக்க, டிராம் பயணிகளை ஏற்றிக் கொண்டு ஜேர்மன் நாட்டு எல்லையை நோக்கிப் புறப்படலாயிற்று.

(தொடரும் ....)

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## விடுவிப்பு ...

(ஐயாக்கள் எங்களுக்குச் சரியான பசி தின்னக்குடிக்க எதுவும் இருந்தா உதவுங்கள்.)

சுவாம்பிள்ளை தன்னுடைய நிலைமையைச் சொன்னதும் பிஸ்கட்,சோடா கொடுத்து அவனுக்கு அப்போது ஏற்பட்டிருந்த அசௌகரியத்தை நீக்கி விட்டு அவனை எங்கேயும் போக வேண்டாம் சாப்பாடு,தேனீர் வழங்குவதாக கூறி அப்பால் நகர்ந்தனர்.

தெல்லிப்பளை, சுன்னானம், யாழ் நகர பகுதிகளின் பாடசாலைகள்,கோயில்கள் பொது இடங்கள் என நாட்களை கழித்த பிலோமினாவும், பிள்ளைகளும் அங்கங்கே வழங்கப்பட்ட உதவிகளால் நாட்களை போக்க முடிந்த போதும், அந்நிலை நீடிக்கும் என அறிந்து வன்னியில் இருக்கும் தங்கை வீட்டிற்கு செல்வதற்கு திட்டம் போட்டாள்.

அதுக்கிடையில் கணவர் சுவாம்பிள்ளை வந்து சேர்ந்து விடுவார் என எதிர்பார்த்த அவளுக்கும், பிள்ளைகளுக்கும் அந்த நம்பிக்கை சிறுது சிறிதாக காலக்கிரமத்தில் அழிந்தே போயிற்று.

தினமும் சுவாம்பிள்ளைக்கு உணவு மற்றும் தேவைகளை வழங்கி வந்த படையினர் அவனது மதுபாவனைப் பலவீனத்தைப் பயன்படுத்தி வானொலித் தமிழ் செய்திகளில் குறிப்பாக இளைஞர்களால் நடத்தப்பட்டு வந்த புலிகளின் குரல் வானொலிச் செய்திகளை மொழிபெயர்த்து அறிந்து கொள்ளும் கைக்காரியத்தையும் மேற்கொண்டு வந்தனர்.

அதனால் படையினர் இடம் அவனுக்கு தனி மரியாதையே இருந்தது. ஆயினும் மனைவி பிள்ளைகளை விட்டும் அவர்களை பற்றி தகவல் அறிய முடியாமல் போனதும் அவனுடைய இதயத்தை அரித்துக் கொண்டே இருந்தன.

“மாஹத்தையோ மட ஹமத்திப வுள்லமாய் கட்டிய பளாண்ட.. ஏக்கட்ட மட்ட உதவுவக் ஹெண்போனே மாத்தையோ..” (ஐயா எனக்கு விருப்பம் மனைவி புள்ளைகளை பார்க்க. அதுக்கெனக்கு நீங்கள் தான் உதவணும்)

உயரதிகாரி ஒருவனிடம் தன்னுடைய எதிர்பார்ப்பை சமயம் பார்த்துக் காதுகளிலும் போடடு வைக்கத் தவறில்லை சுவாம்பிள்ளை. அவனது நேர்மையையும்,வயதையும் கவனித்த அதிகாரி சொன்னான்,

“லொக்கா. ஆப்டி ஒபவ எவனவா. ஒபளா கட்டிய ஜனக்கொட்ட வெடிதிப்புத் மொணவக் கிறண்டதா” (பெரியவர் நாங்கள் உங்களை அனுப்புவம். உங்கடை ஆக்கள் போகேக்கை வெடி வைச்சா என்ன பண்ணுறது)

இரவோடு இரவாக இருட்டில் தெல்லிப்பளைக் காவலரணுக்கு அப்பால் சனநடமாட்டமற்ற துர்க்கை அம்பாள் கோவிலடியைப் போய்ச் சேரக் கூடியதாய் விட்டால் போய்ச் சேர்ந்திடுவன் என்றான் சுவாம்பிள்ளை. அவ்விதமே படையினர் அவனை அனுப்பி வைத்தனர்.

யாழ்ப்பாணத்துள் நுழைந்த சுவாம்பிள்ளை அனுபவித்து வந்த அனைத்துமே இல்லாமல் தெருக்களில் அலைய நேர்ந்தது தான் கண்ட மிச்சம்.

மயிலிட்டியால் இடம் பெயர்ந்தவர்களில் அநேகமானோர் வடமராட்சியில் பருத்தித்துறை, தும்பளை, விபாரிமூலைப் பகுதிகளில் இருப்பதாக அறிந்து நடையாக நடந்து களைத்துப்போனான் சுவாம்பிள்ளை. ஊரவர்களின் கூற்றுப்படி பிலோமினாவும், பிள்ளைகளும் வன்னிக்குப் போயினரென அறிய முடிந்தது.

பிலோமினாவின் தங்கை வன்னியில் இருப்பதாக அறிந்த சுவாம்பிள்ளை இதுவரை போய் பழகாததால் அவர்களை பெருநிலப்பரப்பில் எங்கே எனத் தேடலாம்? அதனால் அம் முயற்சியையும் கைவிட்டு வாளாவிருந்தான்.

சுவாம்பிள்ளை, மயிலிட்டியால் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளதை பிலேமினா,பிள்ளைகள் அறிந்திருந்தனர். படையினருடன் இருக்கையில் அவர்களுக்கு தகவல் வழங்கியதென்னும் செய்திகளும் உலாவியதால் அவனை வன்னிக்கு அழைக்க மனைவி மக்கள் விரும்பவில்லை.

யாழ்ப்பாணம் வர அவர்களை பொடியள் அனுமதிக்காததும், வந்தும் சொந்தப் பூமிக்குப் போக முடியாத சூழல் நீடிப்பதாலும் சுவாம்பிள்ளை தனித்து விடப்பட்டான்.

நித்திய போதைக்கு தன்னை அடிமையாக்கிக் கொண்ட சுவாம்பிள்ளை, எதை எதையெல்லாமோ வாயுள் சொல்லியவாறு மின்கம்பங்களை சுற்றி வந்தவனைக் கண்டதும் அறிந்தவர் இப்படித்தான் அழைக்கின்றனர்.

“ வெட்டிரும்பு... வெட்டிரும்பு”

“ ஓமடா... ஆண்டவரைக் காட்டிக்குடுத்த ஆக்கள் நீங்க தானடா..”

அவர்களுக்குப் பதிலுரைத்துத் திரிந்த சுவாம்பிள்ளையை இடம் பெயர்ந்து 1995 அக்டோபரில் வடமராட்சிக்குப் போய் ஆறு மாதங்களால் யாழ்ப்பாணம் திரும்பி வந்து காணவே முடியவில்லை.

இடம்பெயர்வின் போதும், படையினருடன் சிங்கள,ஆங்கில மொழிகளில் கதைத்து திரிந்ததாகவும் அவனைக் கண்டவர்கள் கூறினர். என்னுடைய கண்களில் தான் இன்னமும் அவன் படவே இல்லை.

படையினர் 2009 இல் வன்னியைக் கைப்பற்றிவிட்ட பின்பும், இவன் வன்னி போயோ மனைவி மக்கள் இங்கு வந்து சேர்ந்தாலுமோ இன்னமும் மயிலிட்டி மண்ணுக்கு போக ஆறு வருடங்கள் ஓடியும் அனுமதி இல்லையே!

இது சுவாம்பிள்ளை குடும்பத்துக்கு மட்டுமான நிலைமை இல்லை. எப்போதோ அம்மண்ணுக்கு விடுவிப்பு?

# விளையாட்டு

# ரியோ ஒலிம்பிக் 2016



உலக விளையாட்டு ஆர்வலர்கள் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ள ஒலிம்பிக் போட்டிகள் பிரேசில் நாட்டின் அழகிய நகரமான ரியோ டி ஜெனிரோவில் வரும் ஒகஸ்ட் 5 ஆம் திகதி தொடங்க உள்ளது. இந்த ஒலிம்பிக் விளையாட்டில் சில சுவாரஸ்யங்கள் இடம் பெற்றுள்ளன. பிரேசில் நாட்டில் தற்காலிக நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி தில்மா ரவ்செஃப் மற்றும் தற்காலிக ஜனாதிபதி மைக்கேல் டேமேர் இருவரும் ஒலிம்பிக் விளையாட்டு திறப்பு விழாவில் கலந்து கொள்வார்கள் என்று கூறப்படுகிறது.


ஆகஸ்ட் 5 முதல் 21 வரை நடக்கும் விளையாட்டுகளில் 206 நாடுகள் பங்கேற்கின்றன. 17,000 ஒலிம்பிக் வீரர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கின்றனர். அகதிகள் குழு ஒன்றும் இந்த ஒலிம்பிக்கில் பங்கேற்கிறது. 4,50,000 காண்டம்கள் வழங்கப்பட உள்ளன. 11,000 வீரர்கள், ஒரு வீரருக்கு ஒரு நாளைக்கு இரண்டு காண்டம்கள் அல்லது மொத்த எண்ணிக்கையில் 41 காண்டம்கள் வழங்கப்படும். இது லண்டன் ஒலிம்பிக் போட்டியின் போது அளிக்கப்பட்டதை விட 3 மடங்கு அதிகம் என்று ஒலிம்பிக் கமிட்டி அறிவித்துள்ளது. இதில் 1,0000 காண்டம்கள் பெண்களுக்கானதாம். 3,50000 காண்டம்கள் ஆண்களுக்கானதாம். 1,75,000 லூப்ரிகென்ட் பாக்கெட்டுகளும் சப்ளை செய்யப்பட உள்ளதாம். 25,000 பத்திரிகையாளர்கள் ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகளைக் கண்டு தகவல்களை சேகரிக்க வருகின்றனர். 5,00,000 பார்வையாளர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

7.5 மில்லியன் டிக்கெட்டுகள் விற்பனைக்கு உள்ளது. 78,000 பார்வையாளர்கள் பங்கேற்கும் வகையிலான மரகானா ஸ்டேடியத்தில் திறப்பு விழா மற்றும் நிறைவு விழா நடக்கிறது.

112 ஆண்டுகள் பழமை வாய்ந்த கோல்ஃப் இந்த ஒலிம்பிக்கில் இல்லை. ரக்பி செவன் வீரர்கள் ஒலிம்பிக்கில் முதன் முறையாக பங்கேற்று விளையாட உள்ளனர். உதைபந்தாட்டப் போட்டிக்காக 400 பந்துகள் பயன்படுத்தப்படும். இதுவரை உதைபந்தாட்ட உலகில் ஜாம்பவானாக திகழும் பிரேஸில் நாடு ஒருமுறை கூட மெடல் வாங்கவில்லை. சு 10 மைல் தொலைவிற்கு சுரங்க மெட்ரோ பாதை சிறப்பாக இந்த விளையாட்டுக்கென அமைக்கப்பட்டுள்ளது.



ரியோவைச் சுற்றிய நான்கு மண்டலங்களில் விளையாட்டுக்கள் நடைபெறும் 60,000 உணவுகள் 5 ஜம்போ ஜெட்டுகளை நிறுத்தும் அளவிற்கு அந்த உணவு அருந்தும் மையம் அமைக்கப்பட்டுள்ளது. 60,000 உணவுகள் தினமும் பரிமாறப்படும். 80,000 இருக்கைகள் ஒலிம்பிக் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 31 டவர் பிளாக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள 3,604 குடியிருப்பு அடுக்குமாடி வீடுகள் ஒலிம்பிக் விளையாட்டுக்கு பின்னர் விற்கப்படும். 61 சதவீத ரியோ மக்கள் இந்த விளையாட்டை வரவேற்றும் மீதமுள்ள 27 சதவீதம் பேர் பிரச்சினை ஏற்படுமோ என்று அச்சம் தெரிவித்துள்ளனர்.



# ஐரோப்பிய சாம்பியன்சிப்பில் இலங்கைத் தமிழன்




சுவிட்சர்லாந்தின் தேசிய அணியின் சார்பில் இலங்கை தமிழரான சுகந்தன் சோமசுந்தரம் என்பவர் கலந்து கொண்டுள்ளார். ஐரோப்பிய சாம்பியன்சிப் போட்டியில், 4ஓ100அ தொடர் ஓட்டப்பந்தயம் நடைபெற்றது, இதில் சுவிட்சர்லாந்தை சேர்ந்த Suganthan Somasundaram, Pascal Mancini, Amaru Schenkel மற்றும் Alex Wilson ஆகிய வீரர்கள் கலந்து கொண்டனர்.

# அமெரிக்க ஓபன் பரிசுத் தொகை அதிகரிப்பு

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டிக்கான மொத்தப் பரிசுத் தொகை ரூ.310 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட ரூ. 26 கோடி கூடுதலாகும்.

வரும் ஆகஸ்டில் நடைபெறவுள்ள அமெரிக்க ஓபனில் ஆடவர், மகளிர் ஒற்றையர் பிரிவுகளில் சாம்பியன் பட்டம் வெல்பவர்களுக்கு தலா ரூ.23 கோடியே 43 லட்சம் பரிசுத் தொகையாக கிடைக்கும். கடந்த ஆண்டு இதே பிரிவுகளில் சாம்பியன் பட்டம் வென்றவர்களுக்கு தலா ரூ.22 கோடியே 9 லட்சம் ரொக்கப் பரிசாக கிடைத்தது.

இது தவிர ஒற்றையர் பிரிவில் ஒவ்வொரு சுற்றுக்கான பரிசுத் தொகையும் 10 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி இறுதிச்சுற்றில் தோற்கும் வீரருக்கு ரூ.11 கோடியே 71 லட்சமும், முதல் சுற்றோடு வெளியேறுபவருக்கு ரூ.28 லட்சத்து 48 ஆயிரமும் ரொக்கப் பரிசாக கிடைக்கும். இரட்டையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வெல்லும் ஜோடிக்கு ரூ.4 கோடியே 18 லட்சம் கிடைக்கும் என அமெரிக்க டென்னிஸ் சங்கம் தெரிவித்துள்ளது.


US OPEN

ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி எதிர்வரும் ஆகஸ்ட் 29 ஆம் திகதி தொடங்குகிறது.

தினச்செய்தி
என்றும் உங்களுடன்







# இங்கிலாந்தின் 2 ஆவது பெண் பிரதமர்

# தெராஷா மே



இங்கிலாந்தின் 2 ஆவது பெண் பிரதம மந்திரியாக தெராஷா மே சென்ற 13 ஆம் திகதி மகாராணியால் நியமிக்கப்பட்டுள்ளார். 59 வயதுடைய தெராஷா மே டேவிற் கமரொன் அரசாங்கத்தின் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்தவர்.

இதற்கு முன்னால் பெண் பிரதமராக "இரும்பு பெண்" என்று வர்ணிக்கப்பட்ட மார்க்கரட் தட்சர் 4 மே 1979 ஆம் ஆண்டு தொடக்கம் 28 நவம்பர் 1990 ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தின் பெண் பிரதமராக இருந்தார்.



கடந்த ஆறு வருடங்களாக பிரதமராக இருந்த டேவிட் கமரோன், சென்ற 13 ஆம் திகதி இராஜிநாமா செய்ததை அடுத்து தெராஷா மே பிரதம மந்திரியாக பதவி ஏற்றார்.

தெராஷா மே சென்ற புதன் கிழமை, லண்டன் பங்கிங்காம் அரண்மனை சென்றார். அங்கு இங்கிலாந்து மகாராணியான 2 ஆவது எலிசபெத் அவரை பிரதம மந்திரியாக நியமித்தார்.

அதை அடுத்து லண்டனில் பத்து டவுனிங் வீதியில் அமைந்துள்ள பிரதம மந்திரியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு வந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். மேலும் வாசஸ்தலத்திற்கு சென்ற 1 மணி நேரத்தில் தனது புதிய மந்திரிகளை அறிவித்தார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சராக இருந்த பிலிப் ஹமன்டை நிதி அமைச்சராக அறிவித்தார்.

மேலும் தெராஷா மே பிரதம மந்திரி பதவிக்கு போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட முன்னாள் லண்டன் மாநகர சபையின் மேயரான பொறிஸ் ஜோன்ரனை வெளிவிவகார அமைச்சராக நியமித்தார். இவ்வாறு ஜோன்ரனை வெளிவிவகார அமைச்சராக நியமித்தது, அரசியல் அவதானிகள் மத்தியில் பெரும் ஆச்சரியத்தை உருவாக்கிறது.

மேலும், ஐரோப்பிய யூனியனை விட்டு பிரிட்டன் வெளியேறுவது சம்பந்தமாக பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு டேவிட் டேவிஸ்சை அமைச்சராக நியமித்துள்ளார்.

முன்னாள் எரிபொருள், சக்தி ஆகியவற்றுக்கு செயலாளராக இருந்த அம்பர் ரூட்க்கு தெராஷ மே வகித்து வந்த உள்ளூராட்சி அமைச்சு பதவி வழங்கினார்.

மைக்கல் பொலன் பாதுகாப்பு செயலாளராகவும், ஒரு காலத்தில் பாதுகாப்பு செயலாளராக இருந்த லியாம் பொக்ஸுக்கு மீண்டும் அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இவர் சர்வதேச வர்த்தகத்திற்கு பொறுப்பான அமைச்சராக இருப்பார்.

தெராஷா மே மந்திரி பதவியை ஏற்றதையடுத்து பிரான்ஸ் ஜனாதிபதி பிரான் கொயிஸ் ஹொலண்டேயுடனும் ஜேர்மன் நாட்டு ஜனாதிபதி அஞ்சலா மேக்கருடனும் தொலைபேசியில் தொடர்புகொண்டு பிரிட்டிஷ் ஐரோப்பிய யூனியனை விட்டு வெளியேறுவது சம்பந்தமாக பேசினார்கள்.

அந்த தொலைபேசி சம்பாஷணையின் போது பெரும்பான்மையான பிரிட்டிஷ் மக்களின் வாக்குகளின் பிரகாரம், விரைவில் ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் வெளியேறும் என்றும், இந்த வெளியேறுவது சம்பந்தமாக ஐரோப்பிய யூனியனுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இன்னும் கொஞ்சம் கால் அவகாசம் தேவை எனவும், இந்த பேச்சு வார்த்தை புரிந்துணர்வுடனும் இரண்டு பகுதிக்கும் எந்த விதமான பாதிப்பும் இன்றியும் நடைபெறும் என்றும் கூறினார்.




இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஜூலை 16, 2016 அன்று வெளியிடப்பட்டது.